
# ஜாமக்காரன்

WATCHMAN

காவல்காரன்



(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பானவர்களே,**

**உங்களுக்கு இயேசுகிறிஸ்துவினால் ஆறுதல், சமாதானம் உண்டாவதாக.**

**' மறுபடியும் இம்மாத ஜாமக்காரன் மூலமாக உங்களோடு தொடர்பு கொள்வதில் சந்தோஷம். இந்த மாத ஜாமக்காரன் உங்கள் கையில் கிடைக்கும்போது வெளிநாடுகளில் ஊழியம் செய்துக்கொண்டிருப்பேன்.**

**' தொடர்ந்து ஜாமக்காரனுக்காக நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் எனக்கு கிடைத்தது. மிக்க நன்றி.**

**' வாழ்க்கை என்பதுமேடு-பள்ளம் நிறைந்ததாகும். ஒருநாள் சந்தோஷம் மறுநாள் புதிய பிரச்சனை, சில பலவீனங்கள் அல்லது வியாதிகள் இப்படி பல வகைகளில் நாம் யாவருமே பாதிக்கப்டுகேிறோம் இதுதான் வாழ்க்கை. 24மணி நேரமும் சிரித்துக் கொண்டோயிருப்பதோ அல்லது அழுதுக்கொண்டேயிருப்பதோ வாழ்க்கை அல்ல. மாறிமாறி வரும் பிரச்சனைகளின் மத்தியில் நாம் கர்த்தர் மேல்வைத்த நம்பிக்கை, விசுவாசம் இவைகளைக்குறித்து அடிக்கடி நம்மைநாமே பரிசோத்தித்து நிலையான ஆவிக்குரிய ஜீவியத்தில் கடந்துபோய் கொண்டேயிருப்போம்.**

**இஸ்ரவேல் மக்களுக்கு ஒருமுறை மிகப்பெரிய வெற்றி யாராலும் தகர்க்கமுடியாத எரிகோ மதிலை தகர்த்து அதில் வெற்றி களிப்புடன் பிரவேசித்தார்கள். காரணம், எரிகோ மதிலை அவர்கள் 7முறை சுற்றிவந்ததால் அல்ல, ஆர்பரித்ததால் அல்ல-ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தார்கள். அப்போது உங்களை சுத்திகரித்துக்கொள்ளுங்கள். நாளை எரிகோ உங்களுடையதாகும் என்று கர்த்தர் சொன்னபப்டி கீழ்ப்படிந்தார்கள். தங்கள் பாவங்களை அறிக்கையிட்டார்கள். தீர்மானம் செய்தார்கள். தங்களை சுத்திகரித்து கொண்டார்கள். உடனே ஆண்டவர் அவர்களுக்கு வாக்களித்தப்படி பெரும் வெற்றியை பெற்றுக்கொடுத்தார். ஆனால் அந்த வெற்றி சந்தோஷம் அடுத்த யுத்தத்தில் தொடரவில்லை. காரணம் ஆயி என்ற பெயருள்ள பட்டிணத்தை ஜெயிக்கமுயன்றார்கள். ஆனால் ஆயி பட்டிணத்து ஜனங்கள் ஜெயித்தார்கள். இஸ்ரவேல் மக்களை ஓடஓட விரட்டியடித்தார்கள். ஊழியக்காரரும்**

# அக்டோபர் 2015

**மக்களும் சோர்ந்துபோனார்கள். இஸ்ரவேல் மக்களின் இந்த தோல்விக்கு காரணம் என்ன? எரிகோ பட்டிணத்தை பிடிக்க உதவின கர்த்தர் ஏன் இவர்களுக்கு உதவவில்லை. காரணம் மக்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியவில்லை. எதை செய்யக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டாரோ அதற்கு மக்கள் கீழ்ப்படியவில்லை.**

**‘ இஸ்ரவேல் மக்களில்ஆகான் என்பவன் எரிகோவிலிருந்து பாபிலோனிய சால்வையும், இருநூறு வெள்ளி சேக்கலையும், 50 சேக்கல் நிறையான பொன் பாளம் ஒன்றையும் ஆசைப்பட்டு கூடவே எடுத்துவந்துவிட்டான். மற்றவர்கள் அறியாதபடி தன் கூடாரத்தின் மத்தியில் குழிதோண்டி அத்தனையும் புதைத்து மறைத்தான். அந்த ஒரு ஆகான் செய்த பாவம் இஸ்ரவேல் மக்கள் அனைவரையுமே பாதித்தது. தேவ கோபம் இஸ்ரவேல் மக்கள் அனைவர் பேரிலும் இறங்கியது. ஒரே ஒரு மனிதன் செய்த பாவம் முழுதேசத்தின் பாவமாக மாறியது.**

**இதை வாசிக்கும் உங்கள் குடும்பத்தில் ஒருவர் செய்யும் பாவம் முழு குடும்பத்துக்கும் பாதிப்பை உண்டாக்குகிறது. அந்த பாவத்தை கண்டும் காணாதுபோல் நீங்கள் இருந்தால் நீங்கள் தேவ கோபத்துக்கு ஆளாவீர்கள். இப்படி வீட்டுக்கு ஒரு ஆகான் நிமித்தம் முழு குடும்பமும் பாதிக்கப்பட்டு கலங்கிப்போகிறார்கள்.**

**வீட்டில் கர்த்தரின் மனதை வேதனைப்படுத்துகிறவர்கள் உண்டா? ஆண்டவரை கோபப்டுத்தும் மகன் அல்லது மகள் உண்டா?**

**மாமிச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை. ரோம 8:6,7. முழுகுடும்பத்துக்கும் பாதிப்பு வர காரணமானவர்களை திருந்த செய்யுங்கள். அவர்களுக்காக உபவாசித்து ஜெபியுங்கள். ஆகான் இஸ்ரவேலைவிட்டு நீக்கப்படும் வரை இஸ்ரவேல் அனைவரும் வேதனையை அனுபவித்தார்கள்.**

**இப்படிப்பட்ட கர்த்தருக்கு கீழ்ப்படியாத ஆகார் உங்கள் வீட்டில் அல்லது உங்கள் சபையில் அல்லது உங்கள் ஸ்தாபனத்தில் கண்டுபிடித்தால் நடவடிக்கை எடுங்கள். இல்லையானால் தேவ கோபம் எல்லார் மேலும் விழும்.**

**‘ அக்டோபரில் நான் அமெரிக்கா, நியுயார்க், ஐயோவா, சிக்காகோ, கனடா மற்றும் அபுதாபி அரேபிய நாடுகள், லண்டன் கடைசியாக அயர்லார்ந்து தேசம் சென்று நவம்பர் மாதம் 6ம் தேதி இந்தியா திரும்புவேன் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன்.**

**‘ மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன். தொடர்ந்து ஜெபியுங்கள்.**

**‘ எந்த நாட்டுக்கு போனாலும் உங்கள் ஜெபக்குறிப்புகளை என் கையில் கூடவே எடுத்து செல்கிறேன். தொடர்ந்து உங்களுக்காக எங்கிருந்தாலும் ஜெபிப்பேன். வெளிநாட்டில் என் ஜெபநேரம் இரவு 1 மணிக்குமேல் ஆகும். தேவ சமாதானம் உங்களோடு இருப்பதாக. ஆமென்.**

**கர்த்தரின் உன்னத பணியில்**

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# திரும்பி நெ.5& 6
# பார்க்கிறேன்

## வாலிப பிள்ளைகளுக்காக

**ஜாமக்காரன் குறிப்பு:**

அநேக ஆண்டுகளுக்குமுன் வாலிப பிள்ளைகளுக்காக ஜாமக்காரனில் என் வாலிப அனுபவங்களைப்பற்றி எழுதினேன்.

புதிய தலைமுறை வாலிப பிள்ளைகள் இப்போது எழும்பியுள்ளார்கள். அவர்களுக்காக இந்த அனுபவ சாட்சியை மறுபடியும் வெளியிடுகிறேன்.

யாருக்காவது இந்த சாட்சி புத்தக வடிவில் வேண்டுமானால் எனக்கு எழுதினால் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

**குறிப்பு :** என் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே எடுத்து திரும்பிப் பார்க்கிறேன் என்ற தலைப்பில் எனக்கு நேரம் கிடைக்கும்போதெல்லாம் ஜாமக்காரன் வாசகர்களோடு கடந்த சில வருடங்களாகப் பகிர்ந்துகொண்டு வருகிறேன். நிகழ்ச்சிகளில் சில பிரயோஜனமுள்ளவை. சில பிரயோஜனம் இல்லாதவை. இந்த முறை நான் எழுதும் இந்த நிகழ்ச்சி என் வாழ்க்கையில் நடந்தது. இது வாலிபர்களுக்கு நிச்சயம் பிரயோஜனமாக அமையும் என்று நம்புகிறேன். இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியை என் கூட்டங்களில் பிரசங்கிக்கும்போது பல இடங்களில் கூறியிருக்கிறேன். மேலும் நான் இந்த அனுபவ கட்டுரையை எழுதும் 1985ம் வருடத்தை இளைஞர்களின் ஆண்டாக உலகம் கொண்டாடியது. ஆகவே இதை இந்தக் குறிப்பிட்ட ஆண்டிலேயே எழுதுவது பொருத்தமாக இருக்கும் என நம்புகிறேன்.

### உயர்நிலைப் பருவம்:

நான் உயர்நிலைப்பள்ளியில் 6ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். என்னோடு நெருங்கிப் பழகும் **இரண்டு நண்பர்கள்** உண்டு. ஒருவன் காரியத்துக்காகப் பழகுவான். மற்றவன் என் பாட்டுக்காகவும், நான் செய்யும் தமாஷை, சேட்டையை ரசிக்க பழகுவான். பழகும் நோக்கம் எப்படியிருந்தாலும் இரண்டு பேரும் என்னோடு நெருங்கிப் பழகுவார்கள். மேலும் நாங்கள் மூவரும் ஒரேயிடத்திலிருந்து சென்று பயின்று, தினமும் ரயிலில் ஏறி வீடு திரும்புவோம்.

இவர்கள் பெயரைக் சொல்ல விரும்பவில்லை. காரணம் இவர்களின் குடும்பத்தினர் இதை வாசிக்க நேர்ந்தால் மனம் வேதனைப்படுவார்கள்.

இந்த இரண்டு சிநேகிதர்களில் ஒருவன் சிறு வயதிலிருந்தே உலக சந்தோஷமே நோக்கமாக அலைவான். 6ம் வகுப்பு படிக்கும் போதே வகுப்புக்கு மட்டம்போட்டு மேட்னி சினிமா பார்ப்பான். அவன் என்னையும் மற்ற நண்பனையும் சினிமாவுக்கு அழைப்பான். என்னுடைய மற்றொரு நண்பன் பெற்றோருக்குப் பயந்தவன். நானும் அப்படித்தான் சில காலம் பெற்றோருக்குப் பயந்திருந்தேன். என் மற்ற நண்பனின் சகவாசத்தால் சில நல்ல காரியங்களை அவனிடமிருந்து படித்தேன். ஆனால் அதே சமயம் இவனோ என்னுடைய கிண்டல், பகடி, சேட்டை, தமாஷ் இவைகளை ஓரளவுக்குத்தான் ரசிப்பான். ஆனால் சினிமாபோகும் நண்பனோ என் தமாஷ்களை மிகவும் ரசிப்பான். நான் சினிமாப் பாடல் பாடுவதை ஊக்குவிப்பான். அப்போது என் வீட்டில் ரேடியோ இல்லை. என் வீட்டுக்கு அருகில் உள்ள ஒருவரின் வீட்டுக்குச் சென்று தினமும் மாலை 6-30 மணிவரை நான் சினிமாப் பாட்டு கேட்பேன்.சினிமா பார்க்காமலேயே ஒவ்வொரு சினிமாப் பாட்டுக்களையும் அப்படியே பாடுவேன்.என் வீட்டில் சினிமா பார்க்க என்பெற்றோர் அனுமதிப்பதில்லை. சினிமாவுக்குப் பணம் செலவழிக்கும் அளவுக்கூட பண வசதி இல்லாத ஏழ்மை என் வீட்டில் அன்று இருந்தது. இந்தச் சினிமா நண்பன், நான் பாடும் பாடல் சினிமாவில் எந்தக் கட்டத்தில் பாடப்படுகிறது என்பதை கவர்ச்சியாக விவரிப்பான். அவன் விவரிக்க விவரிக்க எனக்குள்ளே சினிமா பார்க்க வேண்டும் என்ற வாஞ்சை அதிகமாகத் தொடங்கியது. ஒருபக்கம் பெற்றோரின் கட்டுப்பாடு, மற்றொரு பக்கம் என் சினிமா மோகம் இவற்றுடன் மிகவும் போராடிக்கொண்டிருந்தேன். 8ம் வகுப்பு வரை அந்தப்போராட்டம் வெற்றி பெறாமல் இருந்தது.

9ம் வகுப்பு பிரவேசித்தபோது ஒருநாள் ஏதோ சூழ்நிலையில் மதியம் எதிர்பாராமல் பள்ளி விடுமுறை விட்டனர். இது என் வீட்டுக்குத் தெரியாது. இப்போது பிசாசு என் **சினிமா நண்பனின்** வழியாகப் புதிய பயங்கர வழிக்கு செல்ல ஆரம்ப அடிக்கல் நாட்டினான். மதியம் விடுமுறை என்பது வீட்டுக்குத் தெரியாது. கூட இருந்த மற்ற நண்பனும் இல்லை. ஏன் நீ இன்று சினிமா பார்க்க என்னுடன் வரக்கூடாது ? நீ வகுப்புக்கு மட்டம்போடவில்லை. மட்டம் போட்டு சினிமா பார்க்க வந்தால்தான் தவறு.. இப்போது விடுமுறையாயிற்றே. மேலும் சினிமா முடியும் நேரம் நாம் வழக்கமாக வீடுசேரும் நேரம். ஆகவே யாருமே நம் தவறை கண்டுபிடிக்க முடியாது. அப்படித்தான் தாமதமானாலும் ரயில் தாமதமானது என்று பொய் சொல்லிக்கொள்ளலாம். இப்படி என்னை மற்றவன் உற்சாகப்படுத்தினான். எனக்கு வியர்க்கத் தொடங்கியது. மனதில் ஒரே போராட்டம். மாட்டேன் என்றுகூற தைரியப்படாதவனாக பிரியமில்லாமல், என்னிடம் பணம் இல்லையே என்று கூறினேன். பணம் நான் தருகிறென்.. நீ என்னோடு வந்தால் போதும் என்றான். பிசாசு எப்படி ஞானமாக வலை விரித்தான் பார்த்தீர்களா?.

எனக்கு பயம் பிடித்துவிட்டது. என்னை நம்பி பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிய என் பெற்றொருக்கு நான் துரோகம் செய்வதுபோல் உணர்ந்தேன். வேண்டாம்டா எனக்குப் பயமாக இருக்கிறது என்றேன். முதலில் பயமாகத்தான் இருக்கும் இதில் ஒன்றுமில்லை. நீ பேசாமல் வா என்று என் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு போனான். சினிமா தியேட்டரின் வாசலில் பெரிய கூட்டம் எல்லோரின் முகங்களும் என் ஆசிரியர்கள் போலவும், என் பெற்றோர் போவும் எனக்குக் காட்சியளித்தன. டேய் என் பெற்றோர் அங்கு நிற்பது போல இருக்கிறது என்றேன். அப்படியென்றால் உன் பெற்றோர் உனக்குத் துணையாகச் சினிமாவுக்கு வந்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளேன் என்றான். தரை டிக்கட் கியூவில் இரண்டு சுவர்களைப் பிளந்துவிடுவதுபோல ஜனங்கள் நெருக்கித் தள்ளிக்கொண்டிருந்தார்கள். நண்பனோ நல்ல அனுபவசாலி, கியூநிற்கும் தூரத்தைப்பார்த்தால் நிச்சயம் நமக்கு டிக்கட்

கிடைக்காது என்று அறிந்து. சுவரில் உள்ள சின்ன பள்ளங்களில் கால் வைத்து சுவறின்மீது ஏறிக்காட்டினான். பிறகு என்னை ஏறச் சொன்னான். முன் எச்சரிக்கையாக என் டிக்கட்டுக்கு உரிய பணத்தை என்னிடம் கொடுத்து ஏறும்படி துரண்டினான். நான் தயங்குவதைக்கண்ட அவனுக்கு இப்போது கோபம் வந்தது. உனக்குக் காசும் கொடுத்து உன்னைக் கெஞ்ச வேண்டியிருக்கிறதே? என்று கத்தினான். பிறகு அவனே என்னை பிடித்து தூக்கிவிட்டான். இப்போது சுவர்மேல் உட்கார்ந்துகொண்டேன். ஆனால் இரண்டு சுவர்களுக்கு மத்தியில் கீழே வெறும் தலைகளாக இருக்கக் கண்டேன். தலைகளின்மேல் எப்படி கால்வைத்து இறங்குவது? அதற்குள் என் நண்பனும் சுவர் மீது ஏறிவிட்டான். ஏறியவுடன் ஒரே தள்ளு என்னைப் பிடித்து தள்ளிவிட்டான். தொபீல் என்று கீழே கியூவில் நின்றுகொண்டிருந்த பல தலைகளின்மேல் விழுந்தேன். அடிடா,உதைடா என்று பல குரல்கள் கேட்டன். அதற்குள் என் உடல் தானாக இரண்டு பேர்களுக்கு மத்தியில் சொருகி நின்றது. அதற்குள் திரும்பவும் அடி, உதை என்ற சத்தம். ஓ என் நண்பனும் குதித்து விட்டான் என்பதை அறிந்தேன்.

பிறகு அவன் என் பெயரைக் கூப்பிட்டது பள்ளிக்கூடத்தில் அட்டன்டென்ஸ் எடுப்பதுபோல் இருந்தது. நானோ ரகசியமாக வசந்திருக்கிறேன். ஆனால் இவனோ ஏன் இப்படி என் பெயரைக் கூறிக் கத்ததுகிறான் என்று கோபம் கோபமாக வந்தது. டிக்கட் கொடுக்குமிடம் வந்தது. அப்போது தான் பத்துக் காசு குதித்த வேகத்தில் எங்கோ தொலைந்துவிட்டதை அறிந்தேன். நண்பன் வரும்வரை காத்திருந்தேன். மறுபடியும் 10 காசு கொடுத்து உதவினான். இருவரும் அடுத்தடுத்து உட்கார்ந்து சினிமா பார்த்தோம். ஆனால் என் மனமோ சினிமாவை ரசிக்க முடியவில்லை. ஒரு வழியாக சினிமா முடிந்து வீடு வந்துசேர்ந்தோம். வீட்டில் நுழைய பயமபக இருந்தது. நல்லவேளை யாரும் ஏன் லேட் என்று என்னைக் கேட்கவில்லை.

## பயம் தெளிந்தது:

முதல் திருட்டு சினிமா பார்த்ததால் எந்தப் பிரச்சனையும் எழவில்லை என்று அறிந்ததும் எனக்குள் தைரியம் வந்தது. இரண்டு மாதங்கள் கழித்து மறுபடியும் ஒரு சினிமா பார்க்க போனோம். இப்படி அடுத்தடுத்து சினிமா மோகத்தில் மூழ்கினேன். என் நண்பனுக்கு நான் நன்றியுடையவனாய் அவனுக்கு அடிமையானேன். இப்போது என்னுடைய மற்ற நல்ல நண்பனை நானே ஒதுக்கினேன். இப்போது ரயிலில் நாங்கள் சேர்ந்து உட்காருவதில்லை. அதிகம் அவனோடு நெருங்கினால் பல கேள்விகளைக் கேட்பான் என்ற குற்ற உணர்வில் அவனை விட்டு நீங்கினேன். என் சினிமா நண்பனே எப்போதும் எனக்குப் பணம் செலவழித்தால் எப்படி? நானும் என்றாவது அவனுக்காகவும், எனக்காகவும் பணம் செலவழிக்க வேண்டுமே. என்ன செய்வது ? என்ற புது எண்ணம் உண்டானது. இப்போதுதான் எனக்குள் திருடும் எண்ணம் புகுந்தது. கடைக்குச் சாமான் வாங்கும்போது நோட்டுப் புத்தகம் வாங்க பணம் கிடைக்கும்போது இப்படிப் பலவகைகளில் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் திருட ஆரம்பித்தேன்.ஆக இந்த என் திருட்டு நடவடிக்கை களுக்குப் பரிசாக அந்த வருடம் 9ம் வகுப்பில் பெயில் ஆனேன். என் நண்பனுக்கு மற்றொரு கெட்ட பழக்கம் உண்டு ஜோசியம், கைரேகை, மோடி வித்தை ஆகியவைகளைப் பார்ப்பது அவன் வழக்கம். ஒருமுறை பெரிய கைரேகை புரொபசர் சேலத்தில் ஒரு லாட்ஜில் தங்கி இருப்பதாக அறிந்து அவரிடம் 30 ரூபாய் கொடுத்து ஒரு நோட்டில் கைரேகையின் பலன், விவரம் எழுதி வாங்கிக்கொண்டான். அப்படியே மற்றொரு நாள் பெரிய ஜாதகம் கணிக்கும் ஜோசியர் சேலம் வந்த விவரமறிந்து ஒரு பெரும் தொகை கொடுத்து தன் நட்சத்திரத்தைக் கூறி ஜோசிய விபரம்

எழுதி வாங்கினான். (அவன் ஒரு கிறிஸ்தவன்தான் என்றாலும் அவன் தகப்பனார் ஒவ்வொரு பிள்ளைகள் பிறந்த உடன் நேரம் நட்சத்திரம் இவைகளைக் ஒரு நோட்டில் குறித்துவைப்பது வழக்கம். அதனால்தான் அவன் தன் நட்சத்திரத்தைக் கூற முடிந்தது.). நட்சத்திரத்தைப்பற்றிய ஜோசியம் கணித்து ஜோசியர் கொடுத்த நோட்டு அவன் கையில் கிடைத்திலிருந்து அவன் சந்தோஷமாக இல்லை. காரணம் கேட்டபோது தன் ஆயுளைக்குறித்த விஷயத்தில் கைரேகையும், நட்சத்திரமும் வித்தியாசமாக காண்பிக்கிறது என்றான். கைரேகையில் இவன் ஆயுள் 87 வரை நீண்டிருக்கும் என்று கூறுகிறது. ஆனால் நட்சத்திரம் 80 வயது வரைதான் இவன் ஆயுள் இருக்கும் என்று கணக்குக் காட்டுவதாகக்கூறி கவலைப்பட்டான். நான் கூறினேன் 7வயது தானே வித்தியாசப்படுகிறது. மேலும் இப்போது இந்தச் சின்னவயதில் அதற்காக ஏன் கவலைப்படுகிறாய் என்றேன். இல்லை அப்படி வித்தியாசம் வரக்கூடாது என்று மீண்டும் கவலைப்பட்டான். சினிமா மோகம் கூடியதால் அந்த ஆண்டு பெயில் ஆவேன் என்று முன்பே எனக்கு புரிந்தது. அப்படியே பெயிலும் ஆனேன். 9ம் வகுப்பில் பெயில் ஆனதாலும் பள்ளியில் மிகவும் பிரச்சனைக்குரியவனாக இருந்ததாலும் பள்ளியைவிட்டு நீக்கப்பட்டேன். என் உறவினர் ஒருவரின் சிபாரிசால் **திருவண்ணாமலை** என்ற ஊரில் ஹாஸ்டலில் சேர்க்கப்பட்டேன். என் சினிமா நண்பனும் நானும் பிரிக்கப்பட்டோம்.

## வருடங்கள் கடந்தன:

என் சினிமா நண்பன் என்ஜினியர் பட்டம் பெற்றான். பம்பாயில் உயர்ந்த கம்பெனியில் நிறைய சம்பளத்தில் வெலை கிடைத்தது. நானும் வைத்தியத்துறையை முடித்து டாக்டரானேன். இப்படி நாங்கள் பல விதத்திலும் வித்தியாசமான சூழ்நிலையில் வாலிப வாழ்க்கையை ஆரம்பித்தோம். இப்போது நான் சம்பாதிக்கும் கட்டத்தில் என் ஆரம்ப வாழ்க்கையிலேயே என்னைக் கர்த்தர் சந்தித்தார். நான் ராணுவத்திலிருந்து வெளிவந்தவுடன் டாக்டராக ஒரு கிராம ஆஸ்பத்திரியில் பணியாற்றினேன். டேனிஷ்பேட்டை கிறிஸ்தவ ஸ்தாபனமான பெத்தேலில் டாக்டராக உதவி செய்யும் பாக்கியம் பெற்றேன். ஆம், அது ஒரு பாக்கியமாகும். காரணம் அங்குதான் கர்த்தர் என்னைச் சந்தித்தார். இரட்சித்தார். ஒருவேளை அங்கு செல்லாமலிருந்தால் என் வாழ்க்கை எப்படியெல்லாம் உலகத்தோடு அழிந்து கெட்டுப்போயிருக்குமோ சரியான வேளையில் சரியான இடத்துக்குக்கொண்டு சேர்த்த கர்த்தருக்குக் கோடானுகோடி ஸ்தோத்திரம். அதன்பின் சேலம் அருகேயுள்ள **டேனிஷ்பேட்டை** என்ற கிராமத்துக்கு அருகே காடயாம்பட்டி என்ற ஊரில் சொந்த ஆஸ்பத்திரி ஆரம்பித்தேன்.நான் இரட்சிக்கப்பட்டு புது மனிதனாக மாற்றப்பட்டது 1964ம் வருடம் மார்ச் மாதம் என்று நினைக்கிறேன். (நான் இரட்சிக்கப்பட்ட விவரம் அடுத்த கட்டுரையில் எழுதுவேன்.) நான் இரட்சிக்கப்பட்டவுடன் என் முதல் பாரம் என்னோடு சேர்ந்து பாவத்தில் ஈடுபட்ட என் நண்பர்கள் எல்லோருக்கும் என்னில் ஏற்பட்ட மாற்றத்தையும், இரட்சிப்பை பற்றியும் கூற வேண்டும் என்பதாகும். இந்த பாரம் என்னை வெகுவாக அழுத்த என் நண்பர்கள் எங்கெல்லாம் சிதறியிருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்றும் பஸ் பிரயாணம் செய்தும் நேரில் அவர்களைக் கண்டுபிடித்து வலுக்கட்டாயமாக இரட்சிப்பைக் கூறிவருவேன். நேரில் காணமுடியாதவர்களின் விலாசங்களைக் கேட்டு எப்படியாவது அவர்களைக் கண்டுபிடித்துக் கடிதம் மூலம் அவர்களுக்கு என் மனமாற்றத்தையும், இரட்சிப்பையும் அறிவித்தேன். அந்த வகையில் என்னை முதன்முதல் பாவத்தில் ஈடுபடுத்திய என் பள்ளி நண்பன் பம்பாய் சென்றவிட்டான் என்பதை அறிந்தேன். என் ஆரம்ப கால சினிமா நண்பனின் விலாசத்தை வெகு கடினப்பட்டு தேடி கேட்டு வாங்கினேன்.

அவன் விலாசம் கிடைத்தவுடன் அவனுக்கு தனியாக ஜெபித்து அவனுக்கு கடிதம் எழுதினேன். என்னில் ஏற்பட்ட ஆவிக்குறிய மாற்றம், இரட்சிப்பு யாவையும் தெளிவாக எழுதி நீயும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதாக வற்புறுத்தி அவனுக்குக் கடிதத்தை எழுதி முடித்தேன். ஆனால் அவனோ என் கடிதம் கிடைத்தவுடன் மிகுந்த சந்தோஷப்பட்டு என்னையும் பம்பாய் வரும்படி அழைத்து கடிதம் எழுதினான். அந்த கடிதத்தில் பம்பாய் ஒரு சொர்க்கம்போல இருப்பதாகவும் பம்பாயின் சந்தோஷத்தை அனுபவிக்க 24 நேரம் எனக்குப் போதவில்லை என்பதாகவும் இங்கு விதவிதமாகச் சந்தோஷத்தை அனுபவிக்கலாம் என்றும் அவன் எழுதினான். ஆனால் இரட்சிப்பைப்பற்றி நான் குறிப்பிட்டு எழுதியதைப்பற்றி ஒரு வார்த்தையும் தன் கடிதத்தில் விமர்சிக்கிவில்லை. அது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. அதானால் அதன் பிறகு அவனோடு கடிதத் தொடர்பு வைக்கவில்லை. சில மாதங்கள் கழித்து அவனே ஒரு கடிதம் எனக்கு எழுதினான். அதில் தனக்கு ஒரு இரகசிய வியாதி பீடிக்கப்பட்டதாயும் அதை தன் கம்பெனி டாக்டரிடம் காட்ட வெட்கப்படுவதாகவும் அந்த வியாதியின் விவரம் மற்றவர் அறிந்தால் தன் உயர்ந்த உத்தியோகத்திற்கு அவமானமாகும் என்பதாலும் மேலும் நீ இப்போது டாக்டரக இருப்பதால் என் வியாதியின் விவரத்தை தெளிவாக இதில் குறிப்பிடுகிறேன். அதற்கான வைத்தியத்தையும். மருந்தையும் சீட்டில் குறித்து உடனே தனக்கு அனுப்ப வேண்டும் நீ குறிப்பிடும் மருந்தை ரகசியமாக வாங்கி உட்கொள்வேன் என்பதாகவும் எழுதியிருந்தான். இதை வாசித்த எனக்கு அவனைக் குறித்து முன்பைவிட பெரும் பாரம் உண்டானது.அவன் எழுதிய கடிதத்துக்குப் பதிலாக ஒரு நீண்ட கடிதம் எழுதினேன். அதில் ....நீ கேட்டுக்கொண்டபடி உன் ரகசிய வியாதிக்கு மருந்து குறித்து எழுதி அனுப்ப இப்போது நான் இஷ்டப்படவில்லை. முதலில் நீ இயேசுவுக்கு உன்னை ஒப்புக்கொடு உன் சரீர சந்தோஷந்தான் பிரதானம் என நினைக்காதே. இந்த மாமிச இன்பத்துக்கு எப்போதும் சலிப்பே இல்லை. முடிவும் இல்லை. இதற்கு அப்பால் நிரந்தரமான ஓர் ஆவிக்குரிய இன்பம் உண்டு. அதை இரட்சிக்கப்பட்டால்தான் அனுபவிக்க முடியும் அதை நீ ஒருமுறை ருசிக்க வேண்டும் என்பதுதான் என் அவா. அதற்கு நீ இடம் கொடுப்பாயா?. உன்னையும் இயேசு நேசிக்கிறாரே உன் ஜீவியத்தை சரிபடுத்து. உன் சிற்றின்ப மோகத்தை விட்டுவிடு இந்த சரீர இன்பம்தான் உலகம் என்று நினைக்காதே என்பதாக எழுதி சில வசனங்களையும் குறிப்பிட்டு நீண்ட ஒரு கடிதம் எழுதினேன். அதற்குப் பதில் உடனடியாக வந்தது. ஆனால் மிகவும் சூடாக வந்தது. அந்த கடிதத்தில் நீ ஒருவன்தான் உலகத்திலேயே டாக்டர் என்று நினைக்கிறாயா? இங்கேயே இரகசியமாகவும் வைத்தியம் செய்துகொள்ள என்னால் முடியுமே. ஏதோ நீ என் ஆத்ம நண்பன் என்பதால் என் இரகசியம் உன்னோடு போகட்டும் என்று எழுதிக் கேட்டேன். நீ என்னடாவென்றால் பெரிய பிகு பண்ணிகக்கொள்கிறாயே என்று கொச்சையாக எழுதி தன் கோபத்தைத் தீர்த்துக்கொண்டான். அந்த கடிதத்தில் கடைசியாக அவன் எழுதிய வாசகம்தான் என்னை அவனைப்பற்றி நம்பிக்கையை இழக்க வைத்தது. அவன் எழுதிய வாசகம் இதுதான். இந்த உலகில் கடவுளால் உண்டாக்கப்பட்டது இந்த உலகம் காணும் இன்பங்களும் மனுஷ படைப்புகளும் கடவுள் கொடுத்த ஞானத்தால் உண்டானது. ஆகவே அவைகளை அனுபவிக்கமனுஷனுக்கு எல்லா விதத்திலும் உரிமையுண்டு. நான் ரிட்டயர்டுஆன பிறகு (வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு) ஈசிச்சேரில் உட்கார்ந்துக்கொண்டே மரணத்தை எதிர்பார்க்கும் இந்த கடைசி வயதில் நீ கடிதத்தில் எழுதிய உபதேசத்தை, ஆலோசனையைக் குறித்து யோசிக்கிறேன். இது என் வாலிப வயது காலம், இந்த வயதில் அனுபவிக்கச் சொல்கிறாய்?. உலகத்தை இப்போது அனுபவிக்காமல் எப்போது அனுபவிக்க சொல்கிறாய்?.

நம் நட்பு தொடர வேண்டுமானால் இனி எழுதும் எந்தக் கடிதத்திலும் தயவுசெய்து இது மாதிரி போரடிக்கும் கிழ உபதேசத்தை எனக்கு எழுதாமல் இரு. நான் இப்படி எழுதியது உனக்கு வேதனையாக இருக்கும், என்னை மன்னித்துவிடு என்று எழுதி முடித்திருந்தான். அந்தக் கடிதத்தை அப்படியே தேவசமூகத்தில் வைத்து அவனுக்காக அவன் ஆத்துமாவுக்காக, இரட்சிப்புக்காக கர்த்தரிடம் அழுது ஓய்ந்தேன். அதன்பின் நான் அவனுக்கு கடிதமே எழுதவில்லை. 6 வாரங்கள் கழித்து அவனுடைய தகப்பனாருக்கு ஒரு தந்தி வந்தது. அது அவன் வேலை செய்த அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்டது. அதில்.... உங்கள் மகன் விபத்தில் இறந்துபோனார்.. உடலை நாங்கள் உங்கள் கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்துவிட்டோம். மன்னிக்கவும். வருத்தப்படுகிறோம். அவர் அறையில் உள்ள அவரின் பொருள்களையும் உடைகளையும் அவருக்கு சேர வேண்டிய சம்பள தொகையையும் பெற்றுப்போகவும் என்று மட்டும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. மரண விவரம் சேலத்தில் உள்ள பெற்றோருக்கு அறிவித்தாலும். அந்நாட்களில் இப்போது உள்ளதுபோல டீசல் என்ஜின், எலக்ட்ரிக் இன்ஜின் இல்லை, நீராவி என்ஜின் பொருத்தப்பட்ட ரயிலானதால் பம்பாய் போய்சேர மூன்றரை நாள் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. ஆகையால்தான் அவன் சரீரத்தை அரசாங்க சட்டத்தின்படி கம்பெனியே அடக்கம் செய்துவிட்டது. அவன் தகப்பனார் மட்டுமே பம்பாய் சென்று உடைமைகளை வாங்கிக்கொண்டு திரும்பினார். திரும்பி வந்தவுடன் அவன் தகப்பனார் அவன் மரித்த விவரத்தை என்னிடம் வந்து விவரித்துக்கூறி கண்ணீர்விட்டார். பம்பாயில் பெண்களும், ஆண்களும் சேர்ந்து நீச்சல் பயிலும் அல்லது குளிக்கும் நீச்சல் குளங்கள் பல உண்டு. அவன் வழக்கமாக தினசரி ஒரு நீச்சல் குளத்துக்குச் செல்வதுண்டு. அன்று வழக்கம்போல் நண்பர்களுடன் நீச்சல் குளத்தில் குதித்து மணிக்கணக்காக விளையாடிக்கொண்டிருந்தான். விளையாடி முடித்து குளத்திலிருந்து படிக்கட்டு வழியாக ஈரத்தலையைத் துவட்டியபடியேமேலே ஏறி வந்தான். கடைசி படிக்கட்டில் கால்வைக்கும் போது கால் வழுக்கி அப்படியே உருண்டு திரும்பவும் குளத்திலேயே விழுந்தான். கீழே விழும்போது தலையில் பலமான அடிபட்டதால் மயக்க நிலையிலேயே தண்ணீரில் விழுந்தான். விழுந்த நிலையில் சிறிது நேரம் தண்ணீரில் அடிபாகத்தில் அப்படியே கிடந்தான். நண்பர்கள்ஓடிவந்து பார்த்தார்கள் தண்ணீர் கண்ணாடிபோல் தெளிவாக இருந்ததாலும் தண்ணீருக்குள் விளக்குகள் இருந்ததாலும் உள்ளே விழுந்த அவனை நன்றாகப் பார்க்க முடிந்தது. அவன் தானே மேலே வந்துவிடுவான் என்று நண்பர்கள் காத்திருந்தனர். சரீரம் மேலே எழும்பவில்லை சில நிமிடங்களில் மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் நீர்க்குமிழிகளும் நுரையும் முத்து முத்தாக நிறைந்து வெளிவந்தன. நிலைமையை யூகித்த ஒருவன் நீரில் குதித்து அவன் முடியைப்பற்றி பிடித்து மேலே கொண்டுவந்தான். உடனே டாக்டர் அழைக்கப்பட்டார். அங்கேயே நீச்சல் குளத்துக்கென்று ஒரு டாக்டர் எப்போதும் உண்டு. உடனடியாக சிகிச்சை நடைபெற்றது. வயிற்றில் உள்ள நீர் வெளியே கொண்டுவரப்பட்டது. ஆனால் எதுவுமே பயனளிக்கவில்லை. அவன் மரித்துப்போனான். ஆம் என் நண்பன் மரித்தே போனான். --- என் நண்பன் போய்விட்டான் --- இனி நான் அவனைச் சந்திக்க முடியாது. -- லாசரு ஐசுவரியவானைப்போல் நாங்கள் இரண்டு பேர் போய்ச் சேரும் இடமும் முற்றிலும் மாறுபட்டதாகும். இந்த மரணம் என் உள்ளத்தை பெரிதும் பாதித்தது. அவனுக்கு கடிதம் மூலம் இரட்சிப்பை நான் அறிவித்திருந்தாலும் ஏதோ ஒரு குற்ற உணர்வு என்னைக் குத்திக்கொண்டே இருக்கிறது. பாவம்செய்ய நாங்கள் ஒன்றாகப் பணம் செலவு செய்த நாட்கள் என் ஞாபகத்துக்கு வருகின்றன.

அவனை நேரில் சந்தித்து இரட்சிப்பைக்குறித்து ஏன் பேசியிருக்கக்கூடாது? பணம் செலவழித்து பம்பாய்சென்று அவன் மரணமடையுமுன்னே அவனை நேரில் சந்தித்துப் பேசி ஜெபித்து வந்திருந்தால் என் மனம் நிச்சயம் மிகவும் சமாதானம் அடைந்திருக்கும். இவன் பணம் செலவழித்துக் கணித்திருந்த நட்சத்திர ஜாதகம் கூறியது இவனின் ஆயுசு 87க்குமேல் நீடிக்கும் என்றும் இவன் கைரேகையின் ஆயுள் ரேகையோ 80ஐ தாண்டிச் சென்றுகொண்டிருக்கிறது என்றும் கூறியது. ஆனால் இவன் இறந்தது தனது 27ம் வயதில் ஆகும். என்ன பரிதாபம் எவ்வளவாய் தன் ஜாதகத்தையும், கைரேகையையும், தன் உயர்ந்த பதவியையும், வாலிப பெலத்தையும். பணத்தையும் நம்பியிருந்தான்.

இன்று பல கிறிஸ்தவர்கள் நாள் பார்ப்பதும் குழந்தை பிறந்தால் உடனே நட்சத்திரம் அறிந்து ஜாதகம் கணிப்பதும் கைரேகை. கிளிஜோசியம் பார்ப்பதும் எத்தனை பெரிய மடமை. இப்படி செய்கிறவர்களிடத்தில் கிறிஸ்து இல்லை என்பதை அறியாமல் இருக்கிறார்களே.உபா. 18:10. நம்மைப்பற்றிய காரியங்களை, பலன்கள் பிற்கால இரகசியம் யாவும் கர்த்தருடைய கரங்களில் இருகின்றன என்ற விவரம் பலர் அறிந்தும் அறியாமலே இருக்கிறார்கள்.

மேலும் "வரும் காரியங்களை என்னிடத்தில் கேளுங்கள்" என்று கர்த்தர் நம்மோடு கூறுகிறார். ஏசா. 45:11. தாவீது கூறுகிறான் : நானோ கர்த்தாவே உம்மை நம்பியிருக்கிறேன்... என் காலங்கள் உமது கரத்திலிருக்கின்றது. (சங் 31:14,15) என்று விசுவாசித்தான்.

கர்த்தர் கூறுவதைக் கவனியுங்கள்... குறி சொல்லுகிறவனும் நாள் பார்க்கினும் அஞ்சனம் பார்க்கிறவனும்... செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். உபாகமம்18:10,11, லேவி. 19:26 என்று கர்த்தர் திட்டவட்டமாக எச்சரித்திருக்கிறார்.

என் நண்பன் கர்த்தரையும் அவர் கிருபையிலும் நம்பிக்கை கொள்ளவில்லை. தன் சரீர பெலத்தையும் நன்மை பயக்காத ஜாதகத்தையும் நம்பினான். கர்த்தருடைய வசனத்தை அலட்சியம்செய்தான். கர்த்தருடைய வசனத்தைக் கேட்கவே இஷ்டமில்லாத ஒரு பெயர்க் கிறிஸ்தவனாக வாழ்ந்தான். மனம் திரும்புவதில் அவனுக்கு இஷ்டமில்லை.

தன் ஞானம், படிப்பு. பட்டம். பதவி. பணம். இளமை. ஆரோக்கியம். தன் சாமர்த்தியம் இவைகளை் தன்னை காப்பாற்றும் என்று நம்பினான். தன் மரணம்வெகு தொலைவில் உள்ளது என்று நினைத்தான். ஆனால் அது இத்தனை சமீபமாய் தன்னைச் சந்திக்கும் என்று அவன் கருதவில்லை.

**மனுஷனுக்குச் செம்மையாய் தோன்றுகிற வழியுண்டு. அதின் முடிவோ மரண வழிகள்"நீதி. 16:25 14:12**

**"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். நீ. 28:13**

**"நீ சுகமாய் வாழ்ந்திருக்கையில் நான் உனக்குச் சொன்னேன் கேளேன் என்றாய் கீழ்படியாததது உன் சிறு வயது முதலே பழக்கம்".எரே. 22:21**

துர் கிரியைக்கு ஏற்ற தண்டனை சீக்கிரமாய் நடவாதபடியால் அவன் பாவம் செய்ய துணிகரம் கொள்கிறான். பிர. 8:11

இன்றே இரட்சண்ய நாள் என்று வேதம் கூறுகிறது. மேலும் கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாய் இருக்கும்போதே அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். இப்படியெல்லாம் வேதம் நம் ஒவ்வொருவரையும் எச்சரிக்கிறது. தேவன் நமக்கு கொடுத்ததோ **ஒரே ஒரு வாழ்க்கையாகும்.** மனந்திரும்ப வேண்டுமானால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த வாழ்க்கையின் சந்தர்பத்திலேயே மனந்திரும்பினால் தான் உண்டு மரித்தபின் மனந்திரும்ப வழியே இல்லை. இதை வாசிக்கிற வாலிப மக்களே அற்ப கூழுக்காக தன் சேஷ்டபுத்திர பாக்கியத்தை இழந்த ஏசாவைபோல ஒரு சில நிமிட நேரத்தில் தீர்ந்துப்போகும் அல்லது தணிந்துபோகும் இந்த சரீர உணர்ச்சியின் இன்பத்துக்காக பெரிய இரட்சிப்பையும் அதன் பரலோக சந்தோஷத்தையும் இழந்து போக வேண்டாம். உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு பாவங்களை இயேசு கிறிஸ்துவிடம் அறிக்கையிட்டு விட்டுவிட்டால் பாவ மன்னிப்பை உடனே பெற்றுக்கொள்ள முடியும். **யோ. 3:3 ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தை காண மாட்டான்.** இதை வாசிப்பவர்கள் இப்போதே இந்த நிமிடமே மன்நதிரும்பினால் உடனே இரட்சிப்பு. என் நண்பன் இறந்துபோனான் இனி அவனுக்கு மனந்திரும்ப இரட்சிக்கப்பட சந்தர்ப்பமே இல்லை. ஆனால் இதை வாசிக்கும் நீ இன்னும் சாகவில்லை. ஆகவே தேவன் கிருபையாக உனக்கு மனந்திரும்ப சந்தர்ப்பம் கொடுத்துள்ளார். அதை பயன்படுத்தி கொள்வாயா? இன்றே இரட்சிக்கப்படு அதுதான் தேவ சித்தம்.

## ஆலோசனை:

அன்பான வாலிப தம்பி, தங்கையே,

உன் வழியைச் சரிப்படுத்திக்கொள் உன் தவறான நண்பனை அடையாளம் கண்டு விலகிக்கெள். என் நண்பன்தான் என்னை முதல் பாவம் செய்ய தைரியப்படுத்தினான். தைரியப்படுத்தியது மட்டுமல்லாமல் பாவம்செய்ய தன் பணத்தை எனக்காகச் செலவழித்து உதவியும் செய்தான். அந்த ஆரம்ப பாவம் என்னை தொடர்ந்து பல பாவங்களை செய்ய தைரியம் வந்தது. அப்படியே பெரும் பாவங்களிலும் விழுந்தேன். பெரும் பாவியாக மாறினேன். தவறான நண்பர்களின் சேர்க்கை என்னை பாவத்தில் தள்ளிவிட்டது. அதன் மூலம் என் அம்மாவையும் அப்பாவையும் கலங்கப் பண்ணினேன். கண்ணீர்விடவைத்தேன். என்னால் என் பாவ ஜீவியத்தால் என் வீட்டில் சமாதானம் இல்லாமல் போனது. வேதத்தில் முதல் சங்கீதம், முதல் வசனத்தை அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள். அதிக சிரிப்பு அதிக தமாஷ். பரிகாசம் , கிண்டல் இவைகள் உன் ஆவிக்குரிய ஜீவியத்தைத் திசை திருப்பிவிடும் ஜாக்கிறதை?. உன் பெற்றோர் அல்லது மற்றவர் அறியவில்லை என்று நீ செய்கிற பாவம். பேசுகிற பொய் ஆரம்பத்தில் உன்னை தைரியப்படுத்தலாம். ஆனால் அதுவே உன் அழிவுக்கு அஸ்திவாரமாக மாறும், மற்றவர்களால் எச்சரிக்கைப்படும்போதே உன் வழியைச் சரிப்படுத்திக்கொள். அப்படி ஆரம்பத்திலேயே சரிப்படுத்திக்கொள்ளவில்லையானால் அதன் பிறகு நீ விரும்பினாலும் அந்தப் பாவத்திலிருந்து விடுபடவே முடியாது. இது பலரின் அனுபவம் ஜாக்கிறதை.

**"தன் இருதயத்தைக் கடினப்படுத்துகிறவனோ தீங்கில் விழுவான்". நீதி 28:14.**

**"அடிக்கடி கடிந்து கொள்ளப்பட்டும் தன் பிடரியைக் கடினப்படுத்துகிறவன் சகாயமின்றிச் சடுதியில் நாசமடைவான்.** நீதி. 29:1

தானியேல் கைதியாக ஜெயிலில் இருந்தும் கர்த்தர் மேல் கோபப்படாமல். கர்த்தரை வெறுக்காமல் முறுமுறுக்காமல் ஜெயிலுக்குள் தன் நண்பர்களை எப்படிப்பட்டவர்களாக தெரிந்தெடுத்தான் என்பதைக் கவனி. (தானியேல் 2:17,18ல் ஜெபிக்கிற நண்பர்களைத் தானியேல் தெரிந்து கொண்டான் என்று எழுதியிருக்கிறது.).

உனக்கு அண்ணனாய், ஊழியனாய்,ஆலோசனை கூறுகிறேன். உன் கல்லூரி வாழ்க்கை அல்லது உயர் நிலைப்பள்ளி வாழ்க்கையில் அடிக்கடி ஜெபிக்கிற நண்பர்களை கண்டுபிடித்து அவர்களோடு சகவாசம் வைத்துக்கொள். EU என்ற ஸ்தாபன ஊழியர்கள் கல்லூரி வாலிப பிள்ளைகள் மத்தியில் நல்ல ஊழியம் செய்கிறார்கள். அவர்களோடு தொடர்புகள் அல்லது அவர்களை உன் கல்லூரிக்கு அல்லது பள்ளிக்கு வரவழைத்து ஐக்கியம் வைத்துக்கோள். அது உன்னை பாதுகாக்கும்) என் நண்பனுக்கு ஏற்பட்ட இயேசு இல்லாத மரணம் உனக்கு உண்டாகக்கூடாது என்பதற்காக இதை எழுதுகிறேன். இனி நான் என் நண்பனுக்காக எத்தனை நாள் உபவாசம் இருந்து ஜெபித்தாலும் அவன் ஆத்துமாவைச் சரிப்படுத்தவே முடியாது. நரக தீர்ப்பிலிருந்து அவனை யாராலும் இனி தப்புவிக்க முடியாது.

மறுபடியும் கூறுகிறேன். உயிரோடு இருக்கும்போதே இரட்சிக்கப்பட்டால்தான் உண்டு. அதன் பிறகு மனம் திரும்ப சந்தர்ப்பமே இருக்காது. ஒரே ஒரு வாழ்க்கை இந்த வாழ்க்கையைக் கிறிஸ்துவோடு வாழ்ந்து அனுபவித்துப்பார். அதில் எத்தனை சுகம், இன்பம், சந்தோஷம், ஆறுதல் உண்டு என்பதை உணருவாய்.

ஜாமக்காரன் வாசக வாலிபப் பிள்ளைகளைக் கர்த்தர் தாமே எல்லா உலக மாயைக்கும் விலக்கிக் காத்து , தவறான நண்பர்களிடமிருந்து காப்பாற்றி சரீரத்தையும், ஆத்துமாவையும், பரிசுத்தமாக, குற்றமற்றதாக காத்து வழி நடத்துவாராக. ஆமென்.

**குறிப்பு :-**ஆவிக்குரிய வழியில் என்னை வழி நடத்தின சகோதரர்களுள் ஒருவரான **டேனிஷ்பேட்டை பெத்தேல் சகோ. பி.சாமுவேல்** அவர்கள் 1966ம் வருடம் மேலே வாசித்த நிகழ்ச்சிகளை ஒரு **துண்டுப் பிரதியில்** அச்சடித்து வாலிபர்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அன்று அவர் கேட்டுககொண்டது இப்போதுதான் நிறைவேறியது. எழுத உற்சாகப்படுத்திய அன்னாருக்கு நன்றி.

**என் குற்றம் என் வாலிபப் பிராயத் தவறுகள், கர்த்தரின் பணிக்கு அழைப்பைக் குறித்த என் அசட்டை ஆகியவை என்னை முகமுகமாய் பார்க்கின்றன.**

ஸ்காட்லாந்தைச் சேர்ந்த சாமுவேல் ரூதர்போர்ட் என்பவர் இப்படி கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# திரும்பிப் பார்க்கிறேன் 6

‘ குறிப்பு : **திரும்பி பார்க்கிறேன்** என்ற தலைப்பில் என் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள், அனுபவங்களை ஜாமக்காரன் வாசகர்களுக்காக ஜாமக்காரன் பத்திரிக்கையின் வாயிலாகத் தொகுத்துக் கொண்டிருக்கிறேன். அவைகளில் சில பிரயோஜனமுள்ளதும், சில பிரயோஜனமில்லாததுமாக இருக்கலாம். ஆனால் என்னை ஜெபத்தில் தாங்குகிற ஜாமக்காரன் வாசகர்களுக்கு என் வாழ்க்கையில் நடந்த எதையும் மறைக்க விரும்பவில்லை. ஜாமக்காரன் பத்திரிகை ஒரு குடும்ப ஆவிக்குரிய பத்திரிக்கையாகும். பத்திரிக்கையில் வரும் செய்திகள் யாவும் , ஜாமக்காரன் வாசக குடும்பத்துக்காக மட்டுமே எழுதுகிறேன்.

1985ம் வருடத்தை **இளைஞர் ஆண்டாக** உலகம் கொண்டாடியது. அதன் அடிப்படையில் இதற்கு முந்திய பக்கங்களில் என் வாலிப நாட்களில் நடந்த ஒரு சில குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை ஜாமக்காரன் வாவசகர் குடும்பத்தில் உள்ள வாலிபர்களுக்கு பிரயோஜனமாக இருக்க ஜாமக்காரனில் எழுதினேன். அதை சம்பந்தமான பலருடைய கடிதங்கள் என்னை வெகுவாக ஊக்கப்படுத்தின. முன் பக்கங்களில் நான் எழுதிய நிகழ்ச்சிகள் நான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பும் இரட்சிக்கப்பட்ட பின்பும் என் ஆரம்ப கால ஆவிக்குரிய வாழ்க்கையில் நடந்ததை எழுதினேன். ஆனால் இம்முறை இந்தப்பகுதியில் நான் எழுதும் இந்த முழு நிகழ்ச்சிகளும் இரட்சிக்கப்பட்ட பின்பு நடந்தாகும்.

**அன்பானவர்களே**

இம்முறை நான் எழுதும் இந்தச் சம்பவங்கள் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள் குறிப்பாக வாலிபர்கள் ஊழியர்கள் விழுந்து போகாமல் இருக்க மிகவும் உதவுகின்ற ஆலோசனையாக இருக்கும். கர்த்தர் தாமே இந்த நிகழ்ச்சிகளில் தொகுப்பை ஆசீர்வாதமாக்கித் தருவாராக. ஆவிக்குரிய வாழ்க்கையில் ஒவ்வொரு விசுவாசிக்கும் காலை ஜெபம் மாலை ஜெபம் மிக முக்கியமானதாகும். இந்த இரண்டு ஜெப வேளைகளும் நாம் கர்த்தரோடு பேச பயன்படுவது மட்டுமல்லாமல் நம் ஆவிக்குரிய ஜீவியத்தின் நிலையை அளந்து பார்க்கும் அளவு கோலாக பயன்படும். மனம் திரும்பி பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பின் அனுபவத்தை பெறும்போது விவரிக்க இயலாத ஓர் ஆவிக்குரிய சந்தோஷம் நம் உள்ளத்தில் உண்டாகும். இந்த சந்தோஷத்தின் அடிப்படையில் நம் ஆத்துமா ஒவ்வொரு நாளும் தேவனோடு உறவுக்கொள்ளத் துடிக்கும் அந்த ஜெப நேரங்கள் நம் ஏமாற்றங்களை, வேதனைகளை, கவலைககளை மறக்கும் ஓர் இன்ப நேரமாகும். எப்போது ஜெப நேரம் வரும் என்று மிக வாஞ்சையோடு மனம் காத்திருக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட ஆவிக்குரிய ஜெப ஆவலும் சந்தோஷமும் தேவனுக்கும் நமக்கும் நல்ல உறவு இருக்கும் வரை தொடர்ந்து இருக்கும். ஆவிக்குரிய எண்ணங்களிலிருந்து நாம் விலகும்போது பாவ எண்ணங்களும், பாவ செய்கைகளும் நமக்குள் உண்டாகும்.அதன்பின் நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவிலே முறிவு, இடைவெளி உண்டாக ஆரம்பிக்கிறது. கர்த்தரோடு உள்ள உறவில் முறிவு உண்டாவதற்கு முதல் அடையாளம். நமக்கு ஜெபிக்க வேண்டும் என்றிருந்த ஆரம்பகால ஜெபஆவல் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும். மாத்திரமல்ல ஜெபிக்கும்போது உண்டாகி கொண்டிருந்த ஆத்தும சந்தோஷம் இப்போது நமக்குள் உண்டாவது நின்றுப்போகும்.

மேலும் அந்தச் சந்தோஷத்தை இழந்திருக்கிறோமே என்ற கவலையும் உருத்தலும் நமக்குள் உண்டாவதை நாமே விரும்பாமல் இருப்போம். இந்த நிலையை ஒரு விசுவாசி புரிந்துகொண்டு இழந்துபோன ஜெப ஆவலையும் சந்தோஷத்தையும் மீண்டும் பெற முயற்சிக்க வேண்டும். அதை அவன் விரும்புவானேயானால் அவனுக்குள் நிச்சயம் உயிர்மீட்பு உண்டாகும். ஆனால் அதைப்பற்றி கவலையீனமாக இருந்தால் பயங்கர பின்மாற்றம் உண்டாகும். என் வாழ்க்கையிலும்மேற்கூறிய அனுபவம் இரட்சிக்கப்பட்ட ஆரம்ப காலத்திலேயே உண்டானது. நான் 1964ம் வருடம் இரட்சிக்கப்பட்டேன். என்ஆரம்ப நாட்களில் ஆவிக்குிரிய வாழ்க்கையில் என்னை ஆவிக்குரிய பாதைக்கு வழி நடத்தின 4 குடும்பங்கள் உண்டு. இந்த நான்கு குடும்பங்களும் எனக்கு ஆவிக்குரிய ஆலோசனைக் கொடுத்து ஜெபித்து வழி நடத்தினர். ஒவ்வொரு வாரமும் அந்த நான்கு குடும்பத்தினரையும் நான் போய் சந்திப்பேன். நாங்கள் பல ஆவிக்குரிய காரியங்களை பகிர்ந்துகொண்டு சேர்ந்து ஜெபிப்போம். இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து என் தனிப்பட்டட ஜெப நேரங்கள் பரலோக சந்தோஷமாக அமைந்திருந்தன. ஆனால் ஒருநாள் என் காலை ஜெபம் சீக்கிரமாய் முடிந்துவிட்டது. மாலை ஜெபத்திலும் உற்சாகம் இல்லை. ஜெபத்தை சீகிரமாக முடித்துக்கொண்டேன். இந்தத் திடீர் மாற்றம் நான்கு நாட்கள் தொடர்ந்தன. ஐந்தாவது நாள் எனக்கு ஜெபிக்க அறவே மனம் வரவில்லை. கடமைக்காக மாத்திரம் ஜெபித்தேன். அன்று பகல் முழுவதும் கடந்த சில தினங்களாக ஏன் என்னால் ஆசையோடு ஜெபிக்க முடியவீல்லை என்பதே சிந்தனையாக இருந்தது. தினம் வேதம் வாசித்தேன் ஆனால் என்ன வாசித்தேன் என்று புரியாமலே வாசித்திருக்கிறேன். அது மாத்திரமல்ல ஏதோ ஒரு குற்ற உணர்வு என் உள்ளத்தில் தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆனால் அந்தக் குற்றம் என்ன என்பதை என்னால் உணர முடியவில்லை. நான் மறைமுகமான பாவத்தில் விழுந்து விட்டேனோ அதையும் என்னால் புரிந்துகொள்ள முடியவீல்லை. எனக்கு கவலையோ, பிரச்சனையோ, தேவையோ வரும்போது என் வீட்டில் அருகே சில பர்லாங் தூரத்தில் ஒரு ரயில்வேபாலம் ஒன்று உண்டு. அந்தப் பாலத்தின் வாராவதியின்மேல் அமர்ந்துகொண்டு ஜெபிப்பது என் வழக்கம். அப்படியே இம்முறையும் ஒரு நாள் முழுவதும் உபவாசம் இருந்து என்னை ஜெபத்தில் உற்சாகம் இழக்கச் செய்த அந்தப் பாவம் என்ன? என்பதை கண்டுபிடிக்க அதே பாலத்தில் அமர்ந்து யோசிக்கலானேன். அந்தப் பாலம் இருந்த இடம் ஓர் ஏகாந்தமான இடம். ஜன நடமாட்டம் இல்லாத இடம். அநேக சமயங்களில் இந்தப்பாலத்தில் உட்கார்ந்து தலை கவிழ்ந்து சத்தம்போட்டு அழுது என்னை ஆறுதல்படுத்திக்கொண்ட அனுபவம் எனக்கு உண்டு. இம்முறையும் அதே இடத்தில் இரண்டு நாள் தொடர்ந்த சென்று என் பாவம் என்ன? என்பதை கண்டுபிடிக்க ஜெபத்தோடு முயன்றேன். ஆனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

வெளியரங்கமான பாவத்தில் விழுந்திருந்தால் சீக்கிரம் என் பாவத்தை கண்டுபிடித்திருக்கலாம். ஆனால் நான் வெளிப்படையான பாவத்தில் விழவில்லை என்பதை மட்டும் என்னால் உணர முடிந்து. பின் ஏன் என்னால் ஜெபிக்கவே முடியவில்லை? திரும்பத்திரும்ப யோசித்தேன். காலையிலிருந்து நான் சென்று வந்த இடத்தைச் சந்தித்த நபர்களைக் குறித்து யோசித்தேன். ஆஸ்பத்திரியில் பாவம் நடந்ததா? என்றும் யோசித்தேன். வியாதியஸ்தரை சந்திக்கப்போய் வந்த வீடுகளில் தவறேதும் நடந்ததா? இப்படி எல்லாவற்றையும் ஆராய ஆரம்பித்தேன். எங்காவது பாவத்தில் விழுந்தேனா? இல்லை பின் ஏன் என்னால் ஜெபிக்க முடியாமல் போனது? இன்னும் என்னில் உள்ள குற்ற உணர்வு என்னை விட்டு நீங்கவில்லையே என்று கலங்கினேன்.

## ஜெபிக்கப் போகும் ஆவிக்குரிய வீட்டில் சோதனை

கடைசியில் ஜெபிக்கச்செல்லும் விசுவாசிகளின் (ஆலோசனை கூறும்) வீடுகளில் எங்காவது தவறு நடந்ததா? என்று ஆராய ஆரம்பித்தேன். குற்ற உணர்வின் காரணம் இப்போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது. விசுவாசிகளின் வீடுகளாயிற்றே, இங்கு தவறு உண்டாக வழியில்லையே என்ற எண்ணத்தில்லான் முதலிலேயே இந் வீடுகளைப்பற்றி யோசிக்க முடியவில்லை. இப்போது நான் வழக்கமாக செல்லும் ஒவ்வொரு விசுவாசிகள் வீடாக யோசித்தேன். கடைசியாக மூன்றாவது வீட்டில்தான் நான் பாவத்தில் விழ இருந்தேன் என்பதை உணர்ந்தேன். அதுவும் முழுவதுமாக விழவில்லை. மாமிச செயலில் விழவில்லை. ஆனால் மனதில் விழ இருந்தேன். சொல்லப்போனால் மனதிலும்கூட பாவ எண்ணம் உருவாகவில்லை. பின் எப்படி அதை பாவம் என்பது? நான் முன்பு கூறியபடி இந்த நான்கு வீடுகளுக்கும் ஜெபத்துக்காக வாரா வாரம் செல்வதுண்டு அல்லவா? இந்த நான்கு குடும்பங்களும் என்னை மிகவும் நேசித்தன. நல்ல உபசரிப்பு, நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகளை இந்த நான்கு குடும்பங்களும் எனக்கு அளித்தன.

ஆனால்..... மற்ற மூன்று குடும்பங்களிலும் சென்று அங்கு நான் ஜெபத்துக்காகவும், ஆவிக்குரிய காரியங்கள் பேசவும், செலவழிக்கும் நேரத்தைவிட இந்த மூன்றாவது குடும்பத்தினரின் வீட்டில் மட்டும் அதிக நேரம் செலவழித்தேன். அதிக நேரம் இந்த குடும்பத்தினரோடு பேச ஆசைப்பட்டேன். அதிக சிரிப்பு, அதிகமான தமாஷ் இப்படியாக அதிக நேரங்களை அவ்வீட்டில் செலவழித்தேன். இங்குதான் என்னை அறியாமல் சிந்தனையில் அல்லது மனதில் கற்பனையில் பாவத்தில் விழ இருந்தேன் என்று உணர்த்தப்பட்டேன். மற்ற குடும்பங்களின் வீடுகளுக்கு செல்லும்போது வேதம் வாசித்து ஜெபித்துவிட்டு உடனே திரும்புவேன். ஆனால் இந்த குடும்பத்தினரோடு மட்டும் அதிக நேரம் பேசவும் அரட்டை அடித்து நேரம் போக்கவும் விரும்பினேன். என்னை அறியாமல் ஏதோ அந்த வீட்டில் என் மனம் லயிப்பதையும், கவருவதையும் அடிக்கடி அந்த வீட்டினரோடு பேச வேண்டும்போல என் மனம் விரும்புவதையும் உணர்ந்தேன். அந்த வீட்டினரோடு மட்டும் மிகவும் சிரித்து. தமாஷ்பேசி மகிழ்ந்தேன். என்றாலும் ஒரு சிறிதும் நான் அந்த வீட்டில் பாவத்தில் விழவில்லை பாவ எண்ணங்களும் என் உள்ளத்தில் தோன்றவும் இல்லை. அந்த வீட்டிலுள்ள பெண் பிள்ளைகளும் என்னிடம் தவறாக நடந்துக்கொள்ளவில்லை. ஆனாலும் மனதின் ஆழத்தில் ஏதோ பாவம் நடந்துவிடும் என்பதுபோன்ற ஒரு குற்றஉணர்வு உண்டாக ஆரம்பித்தது. அந்த குற்ற உணர்வுதான் என்னை தேவ சமூகத்தில் நான்கு நாட்கள் தேவனுக்குமுன் நிற்க முடியாதவனாக்கியது என்பதை உணர்ந்தேன். இந்த குற்ற உணர்வு ஆவியானவரால் உண்டாவதாகும் இது எனக்கு மட்டுமல்ல எல்லா விசுவாசிகளுக்கும் உண்டு. ஆனால் அந்ா உணர்வை பெரும்பாலனவர்கள் அசட்டை செய்த கவலையீனமாக கவனிக்காமல் விட்டு விடுவதாலேயே முடிவில் வெளியரங்கமாக பாவத்தில் விழுந்துவிடுகிறார்கள். எந்த ஒரு மனுஷனும் எடுத்த எடுப்பிலேயே திடீரென்று பாவத்தில் விழுந்துவிடுவதில்லை மேலும் யாரும் முதலில் வெளிப்படையாக பாவத்தில் விழுந்துவிடுவதில்லை. ஒருவன் வெளிப்படையாக பாவத்தில் விழுவதற்கு முன்பே முதலில் தன் மனதில் அல்லது தன் சிந்தனையில் விழுந்திருக்க வேண்டும். அதன்பிறகுதான் வெளிப்படையாக பாவத்தில் விழுந்துவிடுகிறான்.

அந்த விதமாக எண்ணத்தில் உள்ளத்தில் பரிசுத்தம் இல்லாத ஒர நிலை உண்டாகும்போதே அதை சரிப்படுத்திக்கொள்ளாமல்போனால் மட்டுமே அவன் வெளிப்படையாக பாவத்தில் விழுந்துவிடுகிறான். என் நிலையும் அந்த காலத்தில் அப்படித்தான் பாதிக்கப்பட்டது. நம் உள்ளத்தில் பாவம் உண்டா என்பதை ஜெபிக்கும்போதே நம்மால் உணர்ந்துகொள்ள முடியும். கண்டுபிடிக்கவும் முடியும். அறியாமல் செய்துவிட்டேன் என்று கூறுவதெல்லாம் பொய். முடிவில் நான் தீர்மானம் எடுத்தேன். சோதனை உண்டாகும் என்று அறிந்த அந்தக் குறிப்பிட்ட மூன்றாம் வீட்டுக்கு இனி செல்லக்கூடாது என்பதுதான் நான் எடுத்த தீர்மானமாகும். அந்தக் குடும்பத்தினர் என்மேல் மன வருத்தம் கொண்டாலும் சரி. என் ஆத்துமா **தேவ சமூகத்தில்** சந்தோஷம் கொள்ளவேண்டும். குற்ற உணர்வு இல்லாதிருக்கவேண்டும் என்பதுதான் எனக்கு மிக முக்கியம். சில வாரங்களில் அந்தக் குறிப்பிட்ட குடும்பத்தினர் என் ஆஸ்பத்திரிக்கே நேரில் வந்துவிட்டனர். மற்ற மூன்று வீடுகளுக்கும் நீங்கள் போனீர்கள் எங்கள் வீட்டுக்கு மட்டும் சில வாரங்களாக ஏன் வரவில்லை? என்றனர். நான் உண்மையைக் கூறினேன். உங்கள் வீட்டில் யாரும் என்னைக் கெடுக்கவில்லை. நானும் தவறு செய்யவில்லை .ஆனால் மற்ற குடும்பத்தைவிட உங்கள் குடும்பத்தோடு அதிகம் நெருங்கி பழக விரும்புகிறேன். உங்கள் வீட்டில் மட்டும் என்னை ஏதோ ஒன்று கவருகிறதை உணருகிறேன். அதினிமித்தம் என் உள்ளத்தில் குற்ற உணர்வு உண்டாகிவிட்டது. அதன்பின் என் ஜெபத்தில் சந்தோஷத்தை இழந்தேன் என்று விவரித்து கூறினேன். அவர்கள் ஒரு நல்ல விசுவாசிகளானபடியால் நான் கூறியதை தவறுதலாக எடுக்காமல் என் நிலைகண்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள். எங்கள் வீட்டில் உங்களுக்கு சோதனை உண்டானால் **எங்கள் வீட்டுக்கு** நீங்கள் வரவே வேண்டாம். ஆனால் கணவனும் மனைவியுமாக நாங்கள் இரண்டுபேரும் நீங்கள் இருக்குமிடத்துக்கே வந்து ஜெபிப்போம் என்று கூறி என்னை ஊக்கப்படுத்தி இந்த எச்சரிக்கை உணர்வை எனக்குத் தந்த தேவனை அவர்களும் துதித்தார்கள். நானும் அவர்களோடு இணைந்து தேவனைத் துதித்தேன். அந்த ஜெப நேரம் எங்களுக்கு இன்பமாக இருந்தது. கர்த்தருக்கே ஸ்தோத்திரம். அந்த வீட்டுக்குப் போவதை நிறுத்தியவுடன் இப்போது என்ஜெபத்தில் பழைய சந்தோஷம் எனக்கு கிடைத்துவிட்டது. அதன்பின் குற்ற உணர்வு இல்லாமல் தேவ சமூகத்தில் நான் நிற்க முடிந்தது.

வீடுகளைச் சந்திக்கும் ஊழியக்காரர்களுக்கு இந்த அனுபவம் பிரயோஜனமாக இருக்கும் என்று இதை எழுதுகிறேன். எந்த வீட்டுக்காவது (காரணத்தோடுதான் செல்லவேண்டி இருந்தாலும்) அடிக்கடி செல்லவேண்டாம்போல மனநிலையில் விருப்பம் உண்டாகும்போது எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எந்த நபரோடாவது அதிகம் நெருங்கிப்பழக வேண்டும் அல்லது பேச வேண்டும்போல மனதில் கவரப்படும்போது அல்லது சலனம் உண்டாகும்போது எச்சரிக்கையக இருக்கவேண்டும். யாரை பார்த்தால் மனதில் சலனம் உண்டாகிறதோ அந்த நபரை பார்ப்பதை தவிர்க்க முயல வேண்டும். அது மாத்திரமல்ல அதிக சிரிப்பு. தமாஷ் இவைகள் ஆவிக்குரிய சிந்தையை மாற்றி திசை திருப்பி விட்டுவிடும். நம் சரீரத்திலேயே பாவம் உண்டு. அது ஜென்ம பாவம். அதைத்தான் பரிசுத்த பவுல் ரோமாபுரியாருக்கு கடிதம் எழுதும்போது (ரோமர் 7:23, 17:20).

என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்க காண்கிறேன். உண்டாயிருக்கிற பாவ பிரமாணத்துக்கு அது என்னை சிறையாக்கிக்கொள்ளுகிறது என்று தன் சரீரத்தையே குற்றம் சாட்டுகிறார்.

நாம் இரட்சிக்கப்ட்டு பரிசுத்தவான்களாக ஜீவித்தாலும் சரீரத்தில் உண்டாகும் சரீர உணர்ச்சிகளை காமசிந்தனைகளை சரீரத்தை விட்டு அறவே நீக்க முடியாது. நாம் மரிக்கும்வரை இந்த உணர்ச்சிகள் சரீரத்துக்குள் இருந்துகொண்டேதான்இருக்கும். வயதுக்கு ஏற்றபடி காம உணர்வுகள் மாறும் ஆனால் அது மரணம் வரை தொடரும். ஆனால் கர்த்தரின் பெலத்தால் அதை கட்டுபடுத்த இயலும். ( SEX ) காமம் எண்ணம் என்பது பாவம் அல்ல. அது கர்த்தரால் இயற்கையாகவே நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டதாகும். அந்த காமஉணர்வு இல்லாமல் போனால் நீங்களும் நானும் சரியான மனிதர்களே அல்ல என்று கூறலாம். ஆகவே அந்த காம உணர்வை செயல்படுத்தத்தான் கர்த்தர் திருமணம் என்ற ஒழுங்கை ஏற்படுத்தினார். அந்த காம உணர்வை அந்த திருமணத்தில்தான் செயல்படுத்த வேண்டும். அதுவரை நம் உணர்ச்சிகளை நாம் கட்டுப்படுத்தவேண்டும்.

இதற்கு வேதத்தில் (இச்சையடக்கம்) என்று எழுதியுள்ளது. இந்த தமிழ்மொழிபெயர்ப்பு சரியில்லை ஆங்கிலத்தில் ( Self control ) என்று எழுதியுள்ளது) நம்மை நாமே உணர்ச்சிகளை கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும். இயலாமல்போனால் உபவாச ஜெபத்தின் மூலம் கட்டுப்படுத்தலாம். என் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட உபவாச ஜெபம் அடிக்கடி செய்வதால் தான் என் உணர்ச்சிகளையும் என்னால் மேற்கொள்ள முடிகிறது. ஜெப சிந்தை மேலோங்கி இருக்கும்போது பாவ சிந்தை உள் அமுங்கிவிடுகின்றது. ஜெபம் குறையும்போது பாவம் மேலோங்கி விடுகிறது. நாம் கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் அந்த சரீர உணர்ச்சிகளை ஓர் எல்லைக்குள் கட்டுப்படுத்திக்கொள்ள முடிகிறது. பிசாசு பாவத்தைக் கொண்டு வருகிறது உண்மைதான். ஆனால் அதே சமயம் பிசாசுக்கு இடம் கொடதீர்கள் என்று வேதம் கூறுகிறதை மறந்துவிடக்கூடாது. எபேசி. 4:27 நாம் இடம் கொடுத்தால் தான் பிசாசு நம்மை மேற்கொள்ள முடியும்.

நாம் இடம் கொடுத்தால்தான் பிசாசு உள்ளே நுழையவும் முடியும். அதுவாக ஒருபோதும் நுழைவதில்லை. நுழைய அனுமதியும் இல்லை. ஜெபக்குறைவு உண்டாகும்போது நாம் பிசாசுக்கு இடம் கொடுக்கிறோம். தவறான நண்பர்களோடு சேரும்போது பிசாசுக்கு நாம் இடம் கொடுக்கிறோம். ஆபாச புத்தகங்கள், ஆபாச சம்பாஷனைகள் ஆகிவற்றை நீ நாடும்போது பிசாசுக்கு மறைமுகமாக உள்ளே நுழைய இடம் கொடுக்கிறாய் .வேதம் வாசிக்காமல் இருக்கும் நாளில் பிசாசுக்கு இடம் கொடுக்கிறோம் என்று அர்த்தம். "நான் உமக்கு விரோதமாய் பாவம் செய்யாதபடிக்கு உமது வார்த்தை என்னிருதயத்தில் வைத்திருக்கிறேன்" என்று சங்கீதக்காரன் தன் அனுபவத்தைக் கூறுகிறான். சங். 119:11.

பிசாசு அல்லது பிசாசின் பாவ சிந்தை உன் மனதில் நுழையாமலிருக்க உன் சூழ்நிலைகளில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் கூடியவரை தனிமையிலிருக்க முயலாதே. அப்படி இருக்ககூடிய நிர்பந்தம் உண்டானால் வேதம் வாசி. ஆவிக்குரிய புத்தகங்களை வாசி, ஜெபி இடைவிடாமல் தேவனோடு தொடர்பு வைத்துக்கொள். இரட்சிக்கப்படும்முன் **பாவத்தை நீயாகவே தேடிப்போனாய்** ஆனால் மனம் திரும்பியபின் பாவம் உன்னைத் தேடிவரும். இலவசமாய் பாவம் செய்யவும் பிசாசு வசதி செய்து கொடுக்கும் இதற்குத்தான் உன் சூழ்நிலையில் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று கூறுகிறேன். இந்த பாவ சூழ்நிலை பாவ உணர்வு இவைகள் வாலிபர்களுக்கு மட்டுமல்ல. திருமணமாகி பிள்ளை பெற்றிருந்தாலும் அவர்களுக்கும் வரும்.

**என் வாழ்க்கையில் நடந்த மற்றொரு நிகழ்ச்சி எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது.**

இரட்சிக்கப்பட்ட என் ஆரம்ப வாழ்க்கையில் பாவம் பலமுறை நான் இருக்கும் இடம் தேடி இலவசமாக வந்ததை அறிந்திருக்கிறேன். கர்த்தர் என்னை யோசேப்பைக் காத்ததுபோல பலமுறை காத்து இரட்சித்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஒருமுறை கிரமத்திலிருந்து ஒரு வாலிபப் பெண்ணை வைத்தியத்துக்கென்று அவளின் தகப்பன் சைக்கிளில் உட்கார வைத்து என் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவந்தார். நான் அவளை பரிசோதித்து அவள் வியாதிக்கு 15 நாட்கள் தொடர்ந்து ஊசி போட்டுக்கொள்ள வேண்டும் என்று ஆலோசனை கூறினேன். அப்படியே அவள் தகப்பன் ஒவ்வொரு நாளும் அவளை சைக்கிளில் கூட்டிவந்து ஊசிபோட்டு கூட்டிபோவார். சில நாள் அவள் அண்ணன் அவளை கூட்டி வருவார். இப்படி நான்கைந்து நாட்கள் கடந்தன. ஒரு நாள் அவள் மட்டும் தனியாக என் ஆஸ்பத்திரிக்கு வந்தாள். காலையிலேயே அவள் வந்து விட்டாள் என்றாலும் அவளுக்குப்பின் வந்தவர்களையெல்லாம் முன்னுக்கு அனுப்பிவிட்டு வியாதியஸ்தவர்களின் வரிசையின் கடைசியில் போய் உட்கார்ந்துகொண்டாள். மற்ற எல்லா வியாதியஸ்தர்களும் போனபின் கடைசியாக அவள் வந்தாள். என்னை தனிமையாக சந்திக்கவே அவள் எல்லாருக்கும் கடைசியாக என் அறையில் நுழைந்தாள் என்பதை பிறகு அறிந்தேன்.

அவள் வந்தவுடன் அவளுக்கு வழக்கமாக போடவேண்டிய ஊசி மருந்தை எடுக்கப்போனேன். ஆனால் அவளோ தன்னை பரிசோதிக்க வேண்டும் என்று என்னை கட்டாயப்படுத்தினாள். தேவையில்லையே முதல் நாளே உன்னை பரிசோதித்துவிட்டேன் இதே ஊசியைத்தான் 15 நாட்களும் தொடர்ந்து போட்டாக வேண்டும் என்றேன். ஆனால் ஆவள் நடந்துகொண்ட விதம் தன்னை பரிசோதிக்க வேண்டும் என்று தன் வஸ்திரங்களை விலக்கி காட்டி கேட்டுக்கொண்ட விதம் இவைகளை வைத்து அவளின் தவறான நோக்கத்தைப் புரிந்து கொண்டேன். பரிசோதனை டேபிளைவிட்டு கீழிறங்கி நாற்காலியில் உட்காரச் சொன்னேன். இன்று ஏன் உன் தகப்பனோடு நீ வரவில்லை? வயலில் நாத்து நடுகிறார்கள். உன் அண்ணனைக் கூட்டிக்கொண்டு வந்திருக்கலாமே? வயலில் நாத்து நடும் வேலை இருக்கும்போது யாரும் வரமாட்டார்கள். வாலிப் பெண் இப்படி தனியாக ஏழு மைல் நடந்து வரலாமா?. நான் சந்தைக்கு பொருள்கள் வாங்க இப்படி தனியாக வந்து பழக்கம் இருக்கிறது. இப்படி என் கேள்விகளுக்கு பட்பட்டென்று பதில் கொடுத்துக்கொண்டே இருந்தாள். முடிவில்தான் நேரிடையாகவே அவளை எச்சரித்தேன். என்னதான் நீ சமாதானம் சொன்னாலும் வாலிப் பெண் இப்படி தனியாக வருவது நல்லதல்ல. வெளிப்படையாகவே உனக்கு சொல்கிறேன் இரண்டு தினங்களாக உன் நடவடிக்கை சரியில்லை அது உனக்குத்தான் ஆபத்தை உண்டுபண்ணும். இப்படிக்கூறி முடிந்தபின் அவள் அளித்த பதில் என்னை அதிர்ச்சிக்கக்குள்ளாக்கியது.

அவள் குனிந்தபடியே கூறினார். ஏன் பயப்படுகிறீர்கள்? இந்தப் பதில் அதை தொடர்ந்து அவள் என்னை பார்த்த பார்வை, என்னை பாவம் செய்ய தைரியப்படுத்தும் வகையில் இருந்தது. இந்தா பாரும்மா உன் எண்ணம் எனக்குப் புரிகிறது. உனக்கு பயமில்லை என்று கூறினாய் .......ஆனால் என்னைக் குறித்து எனக்கு உணர்ச்சிகள் உண்டு. மனுஷன் என்ற முறையில் தவறு செய்ய எனக்கு ஆசையும் உண்டு.

உன் பலவீனத்தை பயன்படுத்தி என் சரீரத்தை சந்தோஷப்படுத்த நான் விரும்பவில்லை இந்த இடத்தில் வேறு யாராக இருந்தாலும் நீ கெடுக்கப்பட்டிருப்பாய் உனக்கென்று வாழ்க்கை உண்டு. அது குற்ற உணர்ச்சி இல்லாததாக அமைய வேண்டும். என்று ஆலோசனைக் கூறி இயேசுவை அவளுக்கு அறிவித்தேன். "என் இயேசுவுக்கு எப்போதும் என்னை அடிமையாக்கிக் கொண்டேனோ அந்த நிமிடமுதல் என் இயேசுவின் மனதை வேதனைப்படுத்தும்" எந்தக் காரியத்திலும் செயல்பட நான் முயலமாட்டேன். என் கைகளில் நான் பாவம் செய்தால் அவர் கைகளில் இரத்தம் ஒழுகும். ஒருமுறை அவர் எனக்காகவும் என் பாவத்துக்காகவும் தண்டனைகளை சகித்தார் மறுபடியும் மறுபடியும் என் பாவத்தால் அவரை வேதனைப்படுத்த மாட்டேன். இயேசுவுக்கு என்னை ஒப்புக்கொடுக்கும் முன் நானே பாவத்தைத் தேடி தெருநாய் போல் அலைந்தேன். இன்று கிறிஸ்தவை அறிவிக்க நன்றியுள்ள நாயாய் அவருக்காக அலைகிறேன் என்று என் சாட்சியை சுருக்கமாக் கூறி முடித்தேன். ஆனால் அவளோ என் சாட்சியை ஏற்றுக்கொள்ள இஷ்டப்பட்டதாக தெரியவில்லை இப்போது என்மேல் அவளுக்குக் கோபமும் ஆத்திரமும் வெளிப்பட்டது என்பதை கண்டேன். பிறகு அவளுக்கு வழமையாக (வழக்கமாக) போடும் ஊசி மருந்தை செலுத்தி அனுப்பினேன். மறுநாள் தன் தகப்பனுடன் வந்தாள். என்னை வெறுப்புடன் நோக்கியவாரே ஊசிபோட தன் கரங்களை காட்டினாள். நான் அவளை அவள் தகப்பனிடம் காட்டிக்கொடுக்கவில்லை.

## அன்பான வாலிபர்களே, வாலிப சகோதரிகளே, விசுவாசிகளே:

இந்த என் அனுபவ நிகழ்ச்சிகளை கொஞ்சம் வெளிப்படையாக எழுதிவிட்டேன் என்று நீங்கள் நினைக்கலாம்.ஆனால் தனக்கு வரும் சொதனைகளை வெளியே சொல்ல மனமில்லாமலும்,அவர்களுக்கு ஆலோசனை கொடுக்க யாரும் இல்லை என்ற நிலையில் மறுபடியும் மறுபடியும் பாவச் சூழலில் வீழ்ந்து தத்தளிக்கும் சிலர் உண்டு. அவர்களுக்கு இந்த என் அனுபவம் பிரயோஜனமாக இருக்கும். மேற்கண்ட நிகழ்ச்சி 1966 நடந்ததென்றாலும் இதை எழுதிக்கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையிலும் அதே சோதனைகள் என்னை தொடர்கின்றன என்பதை நீங்கள் அறியவேண்டும். இத்தனை வருடங்கள் அனுபவம் பெற்ற ஊழியனாக இருந்தாலும் பல ரூபங்களில் பிசாசு என்னை இப்போது சந்திக்க முயற்சிப்பதை நிறுத்தவேயில்லை. ஊழியம் அதிகமாகி என் ஜெபம் குறையும்போது பிசாசு மெல்ல நுழைய ஆரம்பிப்பான். இனம்புரியாத ஒரு வெறுமை என் உள்ளத்தில் தோன்றும் அந்த ஆரம்ப நிலையிலேயே உபவாசம் செய்து அதை சரிப்படுத்திக்கொள்வேன். அப்படி உபவாசிக்காவிட்டால் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுக்கும் நானும் பாவத்தில் விழ நேரும். அதனால்தான் அடிக்கடி உபவாசஜெபம் ஏறெடுக்கிறேன். எந்த விசுவாசியானாலும் ஊழியக்காரனானலும் அடிக்கடி உபவாசிக்கவேண்டியது மிக மிக அவசியமாகும். ஊழியக்காரனுக்கும், விசுவாசி களுக்கும் நிச்சயம் பின்மாற்றமும் பாவசோதனைகளும் நிச்சயம் உண்டாகும். மற்றவர்களுக்கு **பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய் போகாபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.** கொரி 9:27 என்று பவுல் கூறுகிறதுபோல சரீரத்தை ஒடுக்கவேண்டும். அது உபவாசத்தால்தான் முடியும் உபவாசத்தால் தான் சரீரமும் அடங்கும் அதன் பிறகு சரீரத்தை எளிதாக கீழ்ப்படுத்தமுடியும். அதாவது நம் கட்டுப்பாட்டுக்குள் சரீரத்தை கொண்டுவர முடியும் இது என் சொந்த அனுபவம் ஆகும்.

எத்தனை வருடம் வரை அல்லது எத்தனை வயது வரை இந்த முறையைக் கையாள வேண்டும் என்று சிலர் கேட்பார்கள். நாம் சாகும் கடைசி நிமிடம் வரை இதை தொடரத்தான் வேண்டும். சரீர காம உணர்ச்சிகள் நாம் சாகும்வரை நம்மைவிட்டு நீங்காது. என்னை இந்த சோதனையில் தொடர்ந்து வெற்றி பெறவைத்த ஒரு ஜெபம்உண்டு. அது உங்களுக்கு பிரயோஜனமாக இருக்கும் என்று இங்கு குறிப்பிடுகிறேன். ஒவ்வொரு நாள் காலையிலும் நம் சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளுக்காகவும் ஜெபித்து கர்த்தரின் பாதுகாப்பைப்பெற வேண்டும். தாவீது கூறுகிறான் ஆண்டவரே என் வாய்க்குக் காவல் வையும் .என் இருதயத்தைத் துன்மார்க்கத்துக்கு இணங்க வொட்டாதேயும் . சங்கீதம் 141:3,4. தாவீதின் மகன் சாலமோனும் தான் எழுதிய நீதிமொழிகளில் (4:23) **எல்லாக் காவலோடும் உன் இருதயத்தை காத்துகொள்** என்று கூறுகிறார். கர்த்தர் நம் உடலில் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் கட்டுப்பாடும் காவலும் அளித்து காத்துக்கொள்வார்.

**கண் :** முதலாவது ஒவ்வொரு நாள் காலையிலும் என் கண்களுக்காக ஜெபிப்பேன் நம் முழு உறுப்புகளையும் பாவத்துக்கு உள்ளாக்குவது இந்தக் கண் கொண்டுதான். **இருதயத்தின் வாசல் கண்** என்று எழுதியிருக்கிறது. இந்த கண் வழியாக எதையெல்லாம் பார்க்கிறாயோ அதில் மனதையும் பாதிக்கும். அதன் விளைவால் சரீரமும் பாதிக்கப்படும். கர்த்தாவே இந்தப் பகல் முழுவதும் இந்த கண்களால் நான் பாவ காரியங்களைப் பார்க்கக் கூடாது. ஒருவேளை பார்க்க நேர்ந்தாலும் உடனே என் பார்வையைக் கட்டுப்படுத்த எனக்குப் பெலன் வேண்டும். உள்ளத்தின் உணர்ச்சிகளை கிளரும் ஏந்த புத்தகத்தையோ, சினிமா போஸ்டரையோ பார்க்கக்கூடாது என்று ஜெபிக்கவேண்டும். இப்படி ஜெபித்துசென்றாலும் தெருவில் ஒட்டப்பட்டுள்ள சுவர் படங்களை நாம் காணநேரும் என்றாலும் நாம் காலையில் கண்ணின் காவலுக்காக ஜெபித்து பெலத்தை பெற்றுக்கொண்டால் அந்தப் படங்களை நாம் பார்த்தாலும் அது நம்மையும் நம் மனதையும் பாதிப்பதில்லை. அசந்தர்ப்பமாய்க் கண்ணில் ஆபாச காட்சி அல்லது உள்ளத்தை கிளரும் படம் பார்க்க நேருவது தவறல்ல. அதையே உற்றுப்பார்த்து ரசிப்பதில் தான் தவறு. அங்குதான் பாவம் கர்ப்பம் தரிக்கிறது.

**கால்கள்:** இரண்டாவது என் கால்களுக்காக ஜெபிப்பேன் உமக்குப் பிரியமில்லாத எந்த இடத்துக்கும் அல்லது சோதனை உள்ள எந்த வீட்டுக்கும் நான் செல்லக்கூடாது. என் கால்களுக்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும் என்று ஜெபிக்கவேண்டும். எந்த இடத்தில் உனக்குச் சோதனை உண்டோ அந்த வீட்டுக்கு அல்லது அந்த இடத்துக்கு அடிக்கடி போகாதே, சோதனைக்குரிய நபரை சந்திக்கப் பிரியப்படாதே. அது ஊழியக்காரரானாலும் விசுவாசிகளானாலும், திருமணமானவர்களானாலும் திருமணம் ஆகாதவர்களானலும் எச்சரிக்கையாக இரு உன் ஆத்துமாவைக் காத்துக்கொள். பிசாசு சில ஊழியக்காரர் மூலமாகக்கூட உன்னைச் சோதிக்க முயலுவான். எச்சரிக்கையாக இரு ஊழியம் செய்யச் செல்வதுபோல என் உள்ளம் சில சமயங்களில் உள்ளைத் திருப்திப்படுத்தி உன்னை விழத்தள்ளும் இடங்களுக்கு உன் கால்கள் மூலம் உன்னை அழைத்துச்செல்லும் அதனால் கால்களுக்கு ஒரு பரிசுத்த கட்டுப்பாடு தேவை.

**இருதயம் :** மூன்றாவது, நான் என் இருதய சிந்தனைகளுக்காக ஜெபிப்பேன்.

என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்.சங் 66:18 பெரும்பாலான பெண்கள் கிரியைகளில் அல்லது செய்கைகளில் வெளியரங்கமாக பாவம் செய்கிறார்கள். ஆனால் மனதிலே, கற்பனையிலே. சிந்தனையிலே கண்களில் பாவம் செய்கிறார்கள். அப்படி சிந்தனையில் செய்யயும் பாவம் வெளியேதெரியாது. ஆனால் பாவத்தை யோசித்து யோசித்து கற்பனையிலேயே அதை ரசித்து தங்களை திருப்திப்படுத்திக்கொள்கிறார்கள். அதனால் சரீரத்திலே அவர்கள் ஒடுங்கிப்போகிறார்கள் சிந்தனைகளினாலே அவர்கள் ஒடுங்கிப்போகிறார்கள். சிந்தனைகளினாலே வீணானார்கள் (ரோமர் 12:1). என்று வேதம் கூறுகிறது சிந்தனை பாவம் மிகவும் ஆபத்தானது. அதன் ஆபத்து பலருக்கு புரிவதில்லை. இந்த இருதய சிந்தனை நம்மை அதிகமாக தாக்கும் நேரம் இரவு படுக்கையின்போதுதான் அப்போதுதான் நீ அதிகம் யோசிக்கிறாய் அடுத்தது டாய்லட் பாத்ரூம் ஆகிய இடங்களில் தவறான பாவ கற்பனைகள் உருவாகும். ஆகவே மேற்சொன்ன இடங்களில் அதிக நேரம் எடுத்துக்கொள்ளாதே?

‘ தவறான யோசனைகளை தவிர்க்க தாவீது கூறும் யோசனைகளைச் கேளுங்கள் உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் (கர்த்தரோடு) பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள் சங் 4:4 மூன்றாவது வசனத்தில் கர்த்தரோடு ஜெபம் செய்தால் அதை அவர் கேட்பார் என்று தாவீது கூறி பிறகு படுக்கையிலும் தூக்கம் வரும் வரை கர்த்தரோடு பேசிக்கொண்டிருங்கள் என்று ஆலோசனை கூறுகிறார். அப்படி கர்த்தரோடு பேசிக்கொண்டிருக்கும்போது தூக்கத்தில் கெட்ட சொப்பனம் வராது. அமைதியாக பரிசுத்த சிந்தனையோட தூங்கிவிடுவாய்.

இப்படித்தான் நான் ஒவ்வொரு நாள் காலை ஜெபத்திலும் ஒவ்வொரு உறுப்புக்கும் ஜெபம் செய்து கர்த்தரின் காவலைப் பெற்றுக்கொள்வேன். இரவு வரும்போது காலை நான் செய்த ஜெபத்தை மறுபடியும் யோசிப்பேன். ஜெபித்த உறுப்புகளில் என்னையும் மீறி தவறு ஏதும் நடந்ததா? என்று ஒரு நிமிடம் ஆராய்ந்து பார்த்து தவறு நடந்திருந்தால் அந்த இரவே கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டு அப்போதே மன்னிப்பையும் பெற்று அதே தவறு அடுத்த நாள் அந்த உறுப்பில் உண்டாகதபடி இருக்க ஒரு தீர்மானமும் எடுத்துக்கொள்வேன். இந்த விதமான பாதுகாப்புகளை நான் தொடர்ந்து ஏற்படுத்திக்கொள்ளவதால்தான் இன்றும் கர்த்தருடைய கிருபையோடு ஊழியத்தைத் பரிசுத்தத்துடன் தொடருகிறேன்.

எனக்கு உண்டான அதே சோதனை எல்லாருக்கும் உண்டாகும் என்று கூற இயலாது. அவரவர்களின் தொழில்கள் வேலை ஸ்தலங்கள், கல்லூரி ஸ்தலங்கள் இவைகளை அனுசரித்து தான் அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப சோதனைகள் வரும்.

## பெற்றோர்கள் கவனிக்கவேண்டியது.

சோதனைகளுக்கு இடம் கொடுக்காத வகையில் தங்கள் பிள்ளைகளுக்கு அந்தந்த சூழ்நிலைக்கேற்ற அல்லது வயதுக்கேற்ற பாதுகாப்புகளை உண்டாக்கிக் கொடுங்கள். உறவினர்களோ அல்லது வேறு யாரானாலும் சரி. உங்கள் பிள்ளைகளை ஒரு வாலிபனோ வாலிப் பெண்ணோ தனிமையில் சந்திக்க பழக சுதந்திரம் கொடுக்காதீர்கள். அது வயது முதிர்ந்தவரானாலும் ஊழியரானாலும் இவ்விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம்.

மிக அவசியமானால் யாராவது பெரியவர்கள் மேற்பார்வையில் பிள்ளைகளை சந்திக்க வைக்கலாம் அதற்கும் நேர கட்டுப்பாடு மிகஅவசியம்.

உறவினர்களின் வீடுகளுக்கும் அனாவசியமாக பெரியவர்கள் துணையில்லாது வாலிய பிள்ளைகளை அனுப்ப வேண்டாம்.

**திருமணமானவர்களிடத்திலும்** எச்சரிக்கையாக பழகுவது அவசியம்.

இவைகளில் கவலையீனமாக கவனக்குறைவாக இருந்தால் பிசாசு உள்ளத்தில் பிரவேசிக்க நீங்கள் வழி உண்டாக்குகிறீர்கள்.

## நம்முடைய சிந்தனைக்கு

‘ **நிற்கிறேன் என்பவன் விழாதிருப்பானாக.**

‘ **ஸ்தீரியைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது. 1 கொரி 7:1**

‘ **உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும்,**

**நடக்கையிலும்,**

**அன்பிலும், ஆவியிலும்,**

**விசுவாசத்திலும்,**

**கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இரு. 1 தீமோ 4:12.**

‘ **பிசாசுக்கு இடங்கொடாமல் இருங்கள். எபேசி 4:27.**

### கர்த்தர் கூறுகிறார்:

‘ **நான் பரிசுத்தராயிருக்கிறதைப்போல் நீங்களும் பரிசுத்தமாயிருங்கள்.**

### இயேசு கிறிஸ்து கூறினார்:

‘ **நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே(அவனோடே) விபச்சாரஞ் செய்தாயிற்று என்று கூறுகிறார். மத் 5:28.**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# திரும்பி பார்க்கிறேன் 5 மற்றும் 6 தொடர்ச்சி:
# நவீன கால சோதனையும் -பாவமும்

இதுவரை மொபைல்,கம்பியூட்டர் கண்டுபிடிக்காத காலத்தில் வாலிப பிள்ளைகளுக்கு வரும் சோதனைகளை குறித்தும் அதிலிருந்து விலகுவதைக்குறித்தும் எழுதியிருந்தேன்.

ஆனால் இப்போது உலகமனைத்திலும் இந்தியாவிலும் அனைவரின் கரத்திலும் மொபைல் கண்டிப்பாக இருக்கவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். இதை எந்த விதத்திலும் தவிர்க்க இயலாது.

இப்படிப்பட்ட காலகட்டத்தில் பிசாசு மொபைல் வழியாகவும், இன்டர்நெட் வழியாகவும்,டேபிலெட் வழியாகவும் வாலிப பிள்ளைகளின் மனதை கரைப்படுத்தி பாவத்தில் விழ வைக்கிறான். அவன் திட்டம் வெற்றிப்பெற தொடங்கிவிட்டது. குறிப்பாக பேஸ்புக்,டிவிட்டர் போன்றவைகளை நம்பி பலர் தங்களை அறியாது பலரிடம் பாவத்தில் விழுந்துபோகிறார்கள். இது வயது வித்தியாசம் இல்லாமல் வாலிபர் முதல் வயது முதிர்ந்தோர் வரை பாவத்தை நோக்கி ஓட ஆரம்பிக்கிறார்கள்.

வாலிப பிள்ளைகளுக்காகட்டும்,குடும்பஸ்தராகட்டும் பேஸ்புக் என்பது தேவையில்லாதது ஆகும். சினிமா நடிகர்,நடிகைகளுக்கு விபச்சாரிகளுக்கு,அரசியல்வாதிகளுக்கு ஒருவேளை மிகவும் பிரயோஜனப்படலாம். ஆனால் மற்றயாருக்கும் இது தேவையில்லாத ஒன்றாகும்.

பேஸ்புக் ஆரம்பித்து எல்லா மொபைல் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நண்பர்களாக இருக்கவேண்டியது அவசியம் இல்லை. அவர்களுக்கு தங்கள் புகைப்படத்தை சினிமா காட்சிகளை,தங்களை பெருமைப்படுத்தும் விஷயங்களை அனுப்பி அறிவிக்கிறார்கள். அதைப் பார்த்து நீங்கள் அவர்கள் கருத்துக்கு புகைப்படத்துக்கு லைக் கூறினாலும் விமர்சனம் செய்தாலும் அவர்களிடம் நீங்களாகவே போய் ஒட்டிக்கொள்கிறீர்கள் என்று அர்த்தம்.

அதன் பின் வஞ்சக அல்லது கவர்ச்சி வார்த்தைகளை பேஸ்புக்கில் அவர்கள் எழுதி அனுப்ப தானாக சிலந்தி வலையில் போய் ஒட்டிக்கொள்ளும். பூச்சியைப்போல ஆகிவிடுவீர்கள். ஜாக்கிறதை.

அதன்பின் அந்த தொடர்பை நீங்கள்விட நினைத்தாலும் அந்த கவர்ச்சி உங்களை திரும்ப திரும்ப அழைக்கும் உங்களை துாங்கவிடாது.

மிகவும் பிடித்த வாலிபர் பேஸ்புக்கில் தன் புகைப்படத்தை போட்டு நட்புகொள்ள விரும்புகிறவர்கள் என்னோடு சர்ட்டிங் வைத்துக்கொள்ளலாம் என்று எழுத அதில் கவரப்பட்டு சில பெண்கள் தொடர்புக்கொள்ள ஆரம்பத்தில் நல்லவனைப்போல பேஸ்புக்கில் காட்சியளித்தவனின் பேச்சுகள் ஆபாச வார்த்தைகளுக்குள் பிரவேசித்தது. ஒரு சில பெண்கள்-வாலிபர்கள் அவர்களோடு தொடர்பை நிறுத்தினார்கள். சிலர் தொடர்ந்தார்கள்.

ஒருமுறை தன்னை நிர்வாண பேஸ்புக்கில் காட்ட மிகவும் அவனோடு நெருங்கி பழகின பெண் ஒரு கட்டத்தில் அவனை திருமணம் செய்ய இருந்தவள், உடனே அவன் நல்லவன் அல்ல என்பதை அறிந்து தொடர்பை நிறுத்தினாள்.

ஆனால் ஒரு வாரம் மட்டும் அவளால் தொடர்பை நிறுத்த முடிந்தது. ஆனால் மறுபடியும் மறுபடியும் அவனின் ஆபாச காட்சி அவள் உள்ளத்தில் ரசிக்க தொடங்கி மறுபடியும் தொடர்புக் கொள்ள - ஒருநாள் அவன் அழைப்புக்கு இணங்கி கற்பழிக்கப்பட்ட நிலையில் கறைப்பட்டு போனாள். இப்போது இவன் அவளை திருமணம் செய்ய பிரியம் இல்லை என்று கூற அவள் மனநோயாளியானாள். வண்டு வேறு மலரை தேடி போய்விட்டது. இவன் விலாசம் கூட கேட்டு அறியாமல் போனதால் அவனை தேடி நடவடிக்கை எடுக்க பெற்றோராலும் போலீஸாராலும் இயலமல் போனது.

இப்போதும் அவள் மனநிலை பாதிக்கபட்டவளாக ஆலயத்துக்கும் செல்லாமல்,வெளியில் தலைகாட்டாமல் இருண்ட அறையில் அடைந்து கிடக்கிறாள்.

பெற்றோர் ஜாக்கிறதை உங்கள் பிள்ளைகள் பெண் பிள்ளையானாலும்,ஆண் பிள்ளையானாலும் அவர்களின் மொபைல்,கம்பியூட்டர்,டேபிளட்,பேஸ்புக் எதையும் நீங்கள் கவனிக்க உரிமையிருக்கிறது. அடிக்கடி அதை கவனிக்காது கவலையீனமாக என் மகன் யோக்கியன் என் மகள் நான் கிழித்த கோட்டை தாண்டமாட்டாள் என்று நம்பினீர்களேயானால் மோசம் போவீர்கள். பிள்ளைகள் பைத்தியங்களாக வெறிக்கொண்டு அலைவார்கள். அதன்பின் எத்தனை மனநல ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனாலும் மரணம் வரை வைத்தியம் செய்துகொண்டேயிருக்கவேண்டி வரும். குடும்பநிகழ்ச்சிகளுக்கு ஆலய ஆராதனைக்கு கூட உங்களால் கலந்துக்கொள்ள முடியாதபடி வெளியே தலைகாட்ட முடியாத அவமானத்துள்ளாவீர்கள்.

பிசாசு யாரிடமும் பிரவேசிக்க அனுமதியில்லை. ஆனால் நீங்களாக இடம் கொடுத்தால் காத்திருக்கும் பிசாசு தானாக உள்ளத்தின் உள்ளே பிரவேசித்துவிடுவான்.

அதனால்தான் வேதம் கூறுகிறது. **பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்** என்று அறிவுறுத்துகிறது.

வாலிப பெண், வாலிப பையன்கள் பேஸ்புக் வைத்திருக்கும் எந்த நண்பர்களுடனும் விலகியிருங்கள்.

## சத்தியவசன டிவி ஒளிபரப்பு நிகழ்ச்சி அறிவிப்பு:

இவ்வளவு காலம் ஞாயிறு தோறும் பகல் 12 மணி முதல் 12.30 வரை தமிழன் தொலைக்காட்சியில் நடந்துக்கொண்டிருந்த சத்தியவசன நிகழ்ச்சிகள் இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதே நிகழ்ச்சி அக்டோபர் மாதத்திலிருந்து புதுயுகம் என்ற சேனலில் காலை 6 மணி முதல் 6.30 மணி வரை ஒளிபரப்பு செய்யபட்டுவருகிறது.

ஆனால் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு வழக்கம்போல் தமிழன் டிவியிலேயே நிகழ்ச்சிகள் தொடரும். மேற்கொண்டு விவரம் அறிய தொடர்புக்கொள்ள வேண்டிய முகவரி:

**சத்தியவசனம்,**
**21,வெங்கட்ராமன் தெரு,சின்ன சொக்கிகுளம்,**
**மதுரை- 625 002. தமிழ்நாடு.**
போன்: 0452-2532316, செல்: 91-9442532316: இ-மெயில்: info@sathiyavasanam.in.

**www.jamakaran.com**

# CSI SYNOD

## சினாடுக்கு எதிராக சீறும் கிறிஸ்துவர்கள்?



"சர்ச் ஆப் சவுத் இந்தியா" என்பதன் சுருக்கம்தான் சி.எஸ்.ஐ.

தமிழ்நாடு,கேரளா, கர்நாடகா,ஆந்திரா,தெலங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள இதன் 24 திருமண்டலங்களையும் இயக்குவது "சினாடு" என்ற அமைப்பாகும்.

சென்னையில் உள்ள இந்த அமைப்பின் மாடரேட்டர் ஆக இருப்பவர் (பிரதம பேராயர்) கர்நாடகாவைச் சேர்ந்த **தேவஆசீர்வாதம்.** இவரின் பதவிக்காலம் முடிவடைய இருப்பதால், அவசர அவசரமாக சட்ட திருத்தத்தை கொண்டுவர சினாடு நிர்வாகிகள் முயற்சிப்பதாக குற்றம் சாட்டுகிறார்கள் சிலர்.

கடந்த ஆகஸ்ட் 29ம் தேதி தூத்துக்குடி திருமண்டலத்தில் அதற்கான வாக்கெடுப்பு நடந்தது. சட்டத்திருத்தத்திற்கு ஆதரவாக 142 பேரும் எதிராக 188 பேரும் வாக்களித்து தீர்மானத்தை தோற்கடித்தனர்.


24 திருமண்டலத்தில் மூன்றில் இரண்டு மடங்கான 16ல் வெற்றி பெற்றால் சட்டத்திருத்தம் அமல்படுத்தப்படும். இதுவரை 12 திருமண்டலத்தில் தீர்மானம் வெற்றி பெற்றுள்ளது.

இது குறித்து சினாடு செயற்குழு உறுப்பினர். ஜான்சன் டேவிட் கூறுகையில், "24 **திருமண்டலங்களில் மொத்தம் 40 லட்சம் பேர் இருக்கிறார்கள். 13 சட்டங்களைத் திருத்த முயற்சி நடக்கிறது. அதில், சினாடு நிர்வாகிகள் தேர்தல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையும், திருமண்டலத் தேர்தல் நான்காண்டுகளுக்கு ஒருமுறையும் நடப்பதை மாற்றி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை எனத் திருத்துவதும் ஒன்று. அதேபோல, சினாடு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதம பேராயரையும், துணை பிரதம பேராயரையும் குருமார்களும், பேராயர்களும்(பிஷப்) ஒருமனதாக தேர்ந்தெடுத்துக்கொள்ள சட்டத் திருத்தம் செய்கிறார்கள். இதனால் திருமண்டலத் தேர்தலில் லே செயலாளர், பொருளாளர் பதவிகளைக்கூட அவர்கள் தேர்வு செய்யும் ஆட்களுக்கு நாங்கள் வாக்களிக்க வேண்டிய நிலை ஏற்படும். மொத்ததில் இது பாதிரியார்களுக்கு ஆதரவான சட்டத்திருத்தம்"** என கொதித்தார்.

தூத்துக்குடி- நாசரேத் திருமண்டல லே செயலாளர் எஸ்.டி.கே.ராஜனோ,"**பலமுறை இதுபோல சட்டத்திருத்தம் நடந்துள்ளது. சினாடுக்கு ஒரு சட்டம் இருப்பதுபோல ஒவ்வொரு திருமண்டலத்திற்கும் தனித்தனியாக சட்டம் இருக்கிறது. வட மாநிலங்களில் இதை எப்போதோ செய்துவிட்டனர். இதனால் எந்தப் பாதிப்பும் இல்லை"** என்கிறார்.

# கேள்வி – பதில்

## ஜாமக்காரனின் பதில்கள்



### லேப் டாப்

**கேள்வி:** இப்போதெல்லாம் நிறைய ஊழியர்கள் பிரசங்கிக்கும்போது வேத புத்தகத்தை கையில் எடுப்பதில்லை. லேப் டாப் மூலமாக வேத வசனத்தை பிரசங்கிக்கும்போது அதை வாசித்து பிரசங்கிக்கிறார்கள். இது சரிதானா?

**பதில்:** *தவறில்லை. முழுவேதமும்,வேத அகராதிகளும் லேப் டாப்பில் காணப்படுகிறது. வாசிக்கிறதற்கு ஆராய்வதற்கு லேப்டாப் டேபிளில்,மொபைலில் உள்ள வேத புத்தகம் பிரயோஜனப்படுகிறது. பெரிய வேத புத்தகத்தில் எடுத்து செல்வதற்கு பதில் உள்ளங்கை அளவிலே உள்ள மொபைலில் முழுவேதமும் பெரிய எழுத்துகளின் அதை அகலப்படுத்தி வாசிக்கமுடிகிறது.*

*நவீன காலத்துக்கு ஏற்ப அப்படிப்பட்ட பொருள்களை பயன்படுத்துவது நல்லது.*

*அந்த காலத்தில் பவுல் எருசலேம் முதல் இல்லிரக்கம் வரை நடந்து பிரயாணம் செய்து ஊழியம் செய்தான். இந்த காலத்திலும் இத்தனை வாகன வசதிகள் உள்ள காலத்தில் பவுலைப்போல நான் நடந்துதான் போய் ஊழியம் செய்வேன் என்பது முட்டாள்தனம். ஊழியத்துக்கு வாகனங்களை நவீன கருவிகளை பயன்படுத்துவதில் தவறில்லை.*

*ஆனால் மனிதர் பார்வையில் வேத புத்தகத்திலிருந்து தான் நான் பிரசங்கிக்கிறேன் என்று மக்கள் உணர லேப் டாப் உபயோகித்தாலும், அருகே வேத புத்தகத்தை மக்கள் பார்வையில் வைப்பது நல்லது என்னதான் நவீன கருவிகள் முழு வேதமும் கிடைத்தாலும் வேத புத்தகத்தை திறந்து வாசிப்பதுபோல் ஒரு சந்தோஷம். பயபக்தி,லேப்டாப்பிலோ, மொபையிலிலோ டேபிலட்டிலோ நிச்சயம் கிடைக்காது.*

*தயவுசெய்து புறமதத்தினர்களிடம் ஊழியத்துக்குபோகும்போது கை வேத புத்தகத்தை எடுத்துப்போவதே நல்ல சாட்சியாகும்.*

### பட்டிமன்றம்:

**கேள்வி:** பட்டிமன்றம் சாலமான் பாப்பையா அவர்கள் ராஜா என்பவர் எல்லாரும் கிறிஸ்தவர்கள்தானே? குமரிமுத்து என்ற நடிகரும் இப்போது கன்வென்ஷன் பிரசங்கியாக பல CSI சபைகளில் உபயோகிக்கிறார்களே? அதைப்பற்றி உங்கள் கருத்து.

**பதில்:** *கருத்து சொல்ல ஒன்றும் இல்லை. கிறிஸ்தவர்களில் பெயர் கிறிஸ்தவர்கள்,மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள் என்று இரண்டு வகை உண்டு. மறுபடியும் பிறந்த (யோ 3:3) அனுபவம் உள்ளவர்கள்தான் உண்மை கிறிஸ்தவர்கள். அவர்கள்தான் பரலோகம் போக இயலும்.*

*பட்டிமன்றம் சாலமன் பாப்பையா,திரு.ராஜா அவர்கள் எல்லாம் CSI கிறிஸ்தவர்கள்தான். சபை ஆராதனைக்கு வராத கிறிஸ்தவர்கள். சினிமாவிலும் நடிப்பார்கள், வாழ்க்கையிலும் நடிப்பார்கள்.*

*3.7.2005 தினத்தந்தி பேப்பரில் மற்ற பத்திரிக்கைகளிலும் வந்த அவருடைய அறிமுக சம்பாஷணை* **பேட்டியில் குடும்பத்தைப்பற்றி** *கேட்க கேள்விக்கு* **மதுரை மீனாட்சியின் அருளால் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறோம்** *என்று பதில் அளித்திலேயே இயேசுகிறிஸ்து அவரிடம் இல்லை என்பதும் அவர் பெயர்.கிறிஸ்தவர் என்பதும் விளங்குகிறதல்லவா?. இவர்களை வைத்து உங்கள் நாலுமாவடி மோகன் சி.லாசரஸ், அப்பாதுரை யாவரும் கிறிஸ்தவ பட்டிமன்றம் நடத்தி அதை சிடியாக்கி விற்பனையும் செய்து பணம் சம்பாதிக்கிறார்களே. இந்த ஊழியர்களின் விசுவாசம் எப்படியிருக்கும் ஜெபத்தில் பொய்யாய் பலரின் பெயர் அழைப்பதை போன்றுதான் இதுவும். இவர்கள் எல்லாம் கூட்டம் சேர்க்க பயன்படும் ஆட்கள்.*

# அறைகால் டிரவுசர்:

**கேள்வி:** 2015 அக்டோபர் 3ம் தேதி சத்தியம் தொலைகாட்சியில் பால்தினகரன் சிறு பையனாக இருந்தபோது தனக்கு ஆசைப்பட்ட சாப்பாடு கிடைக்கவில்லை, **அறைகால் டிரவுசர்** வாங்கவும் முடியாத ஏழ்மை எங்கள் குடும்பத்தை வாட்டியது என்று அழுதாரே?

***பதில்:*** *தம்பி.பால்தினகரன் அவர்கள் கூறும் பல பகிரங்க பொய்களில் இதுவும் ஒன்று. அவர் தகப்பனார் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் அன்றைக்கு அக்கவுன்டன்டாக வேலை செய்தவர். எல்லாரைக் காட்டிலும் பேங்கில் வேலை செய்பவர்களுக்கு ஏராளமான சம்பளம் கிடைக்கும் என்பது நீங்கள் அறிந்திருப்பீர்கள். பால்தினகரன் குழந்தையாக இருக்கும்போதே அவர்கள் குடும்பத்தை நானும், என் மனைவியும் அறிவோம். எத்தனை வசதியாக வாழ்ந்த குடும்பம் என்பதை மேட்டூர் கிறிஸ்தவர்கள் இன்றும் அறிவார்கள். சகோ.தினகரன் அவரது தந்தை ஒரு ஆசிரியர். அந்தகாலத்து ஆசியராக இருந்தாலும் வறுமையில் வாழாதவர். சகோ.தினகரன் அம்மாவின் கழுத்தில் மட்டும் அந்த காலத்திலேயே அடுக்கடுக்காக தங்க மாலை,காசுகள் பதித்த தங்கமாலை என்று வயதுமுதிர்ந்த போது நகைகளோடு காட்சி அளித்தவர். சகோ.தினகரனின் மனைவிக்கு நகைகள் திருமணத்துக்கு அணிந்தது எத்தனை பவுன்கள் என்பது எங்களுக்கு தெரியும். பாலை ஒரு வைத்திய பரிசோதனைக்கு நான்தான் அன்றைய அரசாங்க தலைமை மருத்துவர்* DMO, Dr.*செல்வராஜ் அவர்களை அழைத்துக்கொண்டு வாடகை காரில் பல மைல் கடந்து ஒரு குறிப்பிட்ட ஆஸ்பத்திரியில் பரிசோதனைக்கு அழைத்து சென்றவன் நான். அன்றே அந்த வைத்தியம் செய்யாதிருந்தால் பால்தினகரனை வேறு மாதிரி நீங்கள் பார்த்திருப்பீர்கள். இதெல்லாம் பழங்காலத்து நடந்த விவரம். இப்போது திருமதி.ஸ்டெல்லாதினகரனை கேட்டாலும் அன்றைய குடும்ப நிலையை கூறுவார். சீறும் செழிப்போடும் குறைவற்ற வாழ்க்கை வாழ்ந்தவர். மக்களின் அனுதாபம் பெற பால்தினகரன் நான் ஏன் இந்த ஏழை குடும்பத்தில் பிறந்தேன் என்று அழுததாக நீலி கண்ணீர் வடிப்பதில் இவர்களை நிம்மதியாக வாழவைத்த தெய்வத்துக்கு இவர்கள் செய்யும் துரோகம் ஆகும். எத்தனை துணிகரம் இது? எல்லாரும் தன்னையும் தன் குடும்பத்தையும் ஸ்டார் ஊழிய குடும்பம் என்று அழைப்பதால் அந்த அபிப்ராயத்தை மாற்ற இந்த அளவு கர்த்தருக்கு நன்றி கெட்ட நிலையில் 1/2கால் டிரவுசர்கூட வாங்கி கொடுக்க முடியாத நிலையில் என் குடும்பம் இருந்தது என்பது எத்தனை பகிரங்க பொய்.*

*அன்றைக்கே சென்னை அரும்பாக்கத்தில் பிள்ளைகள் இரண்டு பேர்களுக்கும் புதுவீடு கட்டி நாங்கள் அங்கு தங்கியிருக்கிறோமே இன்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் சுரண்டை என்ற இடத்தில் அவர்களின் பெரிய குடும்ப வீடு இருக்கிறதே? நானும் சகோ.தினகரனும் அந்த வீட்டை மேற்பார்வையிட இரண்டுமுறை தமிழ்நாடு அரசாங்க திருவள்ளுவர் துரித வண்டியில் பிரயாணம் செய்து போய்வந்தோமே. பால்தினகரன் பேசியது கர்த்தர் இவர்களை குறைவில்லாமல் வாழ வைத்ததற்கு காட்டிய நன்றி கெட்ட செயலாகிறது.*



# பேராயர்.ஸ்டீபன்நீல் அவர்களுடன் ஓர் பேட்டி

**நன்றி : அறைகூவல்**

பேராயர் **ஸ்தேவான் நீல்** அவர்கள் கடந்த நூற்றாண்டில் பிறந்தவர்கள். இங்கிலாந்திலிருந்து இளைஞனாக சி.எம்.எஸ். மிஷனரி சங்கத்தின் மூலம் தென் தமிழக பகுதிகளில் பணியாற்றினார்கள். **திருநெல்வேலி** திருமண்டலத்தின் ஆறாவது பேராயராக பொறுப்பேற்றார்கள். முதிர்ந்த இறைவியல் அனுபவங்களை எளிய நடையில் வழங்குவார்கள். அவர்கள் எழுதிய ஏராளமான புத்தகங்கள் அவர்களது சாதனைகளில் ஒன்று. சமீபத்தில் அவர்கள் இந்தியாவிற்கு வந்திருந்தபோது இவர்களை பேட்டி கண்டோம். மிக்க மகழ்ச்சியோடு தமிழிலேயே பதில்களை தந்தார்கள். தமிழ்மொழியின்மேல் அலாதி பிரியம் வைத்திருக்கின்றார்கள்.

**கேள்வி:** இந்தியாவில் சிறந்த மிஷனரியாக பணியாற்றிய நீங்கள் இன்றைய மிஷனரிகளின் வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்று உங்கள் அனுபவத்திலிருந்து கூறமுடியுமா?

**பதில்:** ஒரே வார்த்தையில் சொல்லிவிடமுடியாது. முக்கியமானது ஆண்டவருக்கு கீழ்ப்படிந்தவர்களாக இருப்பது. உண்மையாய் நேர்மையாக இருக்கவேண்டியது. எல்லோரிடமும் அன்பு பாராட்டுவது. இயேசுகிறிஸ்து நம்மில் ஒருவராக இருந்து, நம்மை நேசிப்பதுபோல நாமும் பிறமக்களை நேசித்து அவர்களோடு ஒன்றி சத்தியத்தை போதிக்கவேண்டும். அவர்களைபோல உடை உடுத்துவது என்பதெல்லாம் அடுத்தது, நாம் எப்படியிருக்கிறோம் என அவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். கிறிஸ்துவை எப்போதும் முன்வைத்து நடக்கவேண்டும் அதைத்தான் கவனிக்கிறார்கள். அதன்மூலம் நாம் சொல்வதை கவனித்துப்பின் நடப்பார்கள்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** எதிர்கால இந்தியச் திருச்சபை வளர்ச்சிக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

**பதில்:** வளர்ச்சியானது. தெய்வத்தின் மூலமாக உண்டாக வேண்டியது. இப்போது இருக்கும் ஊக்கம் குறைந்து போகாதபடிக்கு இருக்கவேண்டும். முக்கியமாக ஊழியம் செய்கிறவர்கள் தளர்ச்சியடையாதபடி கவனமாக இருக்கவேண்டும். கர்த்தருடைய ஜெபத்திலே அன்றன்றுள்ள அப்பத்தை இன்று எங்களுக்கு தாரும் என நாம் சொல்வதுபோல அன்றன்று அவருடைய கிருபை இன்றைக்குப்போதும். நாம் அதை இன்று பெற்றுக்கொண்டு நடக்கவேண்டும். அதையே மற்றவர்களுக்கு போதிக்கவேண்டும். முக்கியமாக ஒரு சிலருக்கு வைராக்கியமாக பிரசங்கம் செய்யும் தாலந்து கொடுக்கப்பட்டிருக்கும். இதைப் பயன்படுத்தி ஆத்துமா ஆதாயம் செய்யவேண்டும். இது எல்லாருக்கும் கொடுக்கப்படுவது அல்ல. பிரசங்கத்தோடுகூட வாழ்க்கையிலும் சாட்சியாக நடந்து எல்லாருக்குள்ளும் இதைப் பரவ செய்யவேண்டும். இதுதான் முக்கியமானது என கருதுகிறேன்.

**கேள்வி:** மிஷனரி சங்கங்கள்,திருச்சபைகள் வைத்துக்கொள்ளவேண்டிய அணுகுமுறைகள் எப்படியிருக்கவேண்டும் என கருதுகிறீர்கள்?

**பதில்:** நான் நினைக்கிறேன். ஆண்டவர் வாசலை எங்கே திறந்து வைத்திருக்கிறார் என்று பார்க்கவேண்டும். அங்கே நல்ல முறையில் ஊழியம் செய்வது முன்னால் தமிழ்நாட்டின் பல இடங்களில் ஜனங்கள் இயேசுவை அறிந்துக்கொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் விருப்பமாய் இருந்தார்கள். ஆனால் போகிறதற்கு ஆட்கள் இல்லாத காரணத்தினால் ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டது. அந்த விருப்பமானது ஜனங்களுக்குள் கொஞ்ச காலத்தில் தானாக போய்விட்டது. திருநெல்வேலியில் 1927ம் ஆண்டு 30,000 பேர் கிறிஸ்தவ மார்க்கத்தை விசாரித்து இணைய ஆவலாக இருந்தனர். ஆனால் அப்போது இருந்த மிஷனரிமார்கள் ஒருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. மிஷனரிமார்களும் மிக குறைந்த அளவிலேயே இருந்தார்கள். ஆகையால் 30,000பேர் ஆயத்தமாக இருந்தும் 3,000பேர் மட்டுமே ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்போது நாம் அங்கே சென்றால் இவ்வளவு நாளாகியும் இன்றும் இயேசுவை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு விருப்பமில்லை. எனவே தருணத்தை நாம் கவனித்து செயல்படவேண்டும். இப்போது இந்தியாவில் பழங்குடி மக்கள் மத்தியில் நல்ல வாய்ப்பு என அறிகிறோம். இந்த வாய்ப்பு சிறிது காலம் மட்டுமே இருக்கும். எனவே ஆண்டவர் என்ன சொல்கிறார் என கேட்டு அதன்படி செயல்பட உள்ளான உணர்வு இருக்கவேண்டும். அந்த உணர்வு இல்லாதபடி எதையாகிலும் செய்தோமானால் பிரயோஜனமில்லாமல் போய்விடும். ஆண்டவர் எதைச் சொல்கிறாரோ அதைச் செய்ய ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்படி உணர்ந்து நடந்து கொள்வோமானல் அணுகுமுறை எளிதாய் அமையும்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** குறிப்பாக நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவிற்கு ஏதாவது ஆலோசனை சொல்ல விரும்புகிறீர்களா?

**பதில்:** அந்நியோந்திய ஐக்கியம் இருக்கவேண்டும். அவ்வப்போது காரியங்களை பகிர்ந்துக்கொள்ளவேண்டும். சரியான நேரத்தில் கடிதங்கள் எழுதுவது, அதற்கு பதில் எழுதுவது போன்றவை முக்கியமானதாகும். அத்துடன் மிஷனரி பாரம் கொண்ட ஒருவர் அதை பிறருக்கு கொடுக்கவேண்டும். நெருப்பைப்போல இது பரவவேண்டும். அதன்மூலம் எனக்கு இந்த ஆசை வந்தது என்று சொல்வது இது விளம்பரப்படுத்துவது அல்ல. ஆனால் இரகசியமாக மிஷனரி தரிசனம் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவவேண்டும். தனித்தனியாக இதைச் செய்வது நல்லது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** அறியப்படாத இடங்களுக்கு முதன்மையாக சுவிசேஷம் சொல்ல செல்லும் மிஷனரிகளுக்கு இறையியல் கல்வி தேவைதானா?

**பதில்:** ஓரளவு தேவைதான். ஆனால் எளிய செய்தியாக சாதாரண மக்களுக்கு வழங்கும் அளவில் பயிற்சி போதுமானது. முறையாக இறையியலை புரிந்துக்கொள்ளும் அளவில் ஓராண்டு,ஈராண்டு என படித்து தெரிந்துக்கொண்டால் போதுமானது. இதற்கு பொதுவான வரையரை ஒன்றும் இல்லை.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**கேள்வி:** இந்தியாவில் பணியாற்றி நாட்களில் உங்கள் வாழ்வில் கண்ட மறக்கஇயலாத சம்பவம் ஒன்று கூறமுடியமா?.

**பதில்:** இது ஒரு முக்கியமான காரியம். எப்போதும் ஒன்று என் மனதில் நிலைத்திருக்கிறது. நீல்புரம் என்ற இடத்தைப்பற்றி முன்னால் எனக்கு தெரியாது. அங்கு ஓர் சிவன் கோவில் இருந்தது. புதிதாக கிறிஸ்வரான மக்கள் அதை இடித்து போட்டார்களாம். அங்கு ஓர் கிறிஸ்தவ கோயில் சுவரில்லாது கூரை மட்டும் போடப்பட்டிருந்தது. அம்மக்களிடம் ஏன் இந்தக் கோயிலை இடித்தீர்கள் என கேட்டார்கள். ஒரே ஊரில் இரண்டு தெய்வங்கள் இருக்கமுடியாது. எனவே அதை இடித்தோம் என்றனர். அந்த நாளில் இருந்து ஆறு வாரம் கடந்தபின் முக்கியமானவர் ஒருவர் மாரடைப்பினால் திடீரென இறந்துபோய்விட்டார். ஆபத்து நேரிட்டது என அம்மக்கள் பின்வாங்கிப்போய்விடவில்லை. நல்ல காரியத்தைப் பற்றியுள்ளோம். உயிருள்ள தேவனை கண்டுள்ளோம் என்பதில் உறுதியாயிருந்தார்கள். இன்னல்கள் மத்தியிலும் நிலைத்து நின்றார்கள் என்பது ஆண்டவரின் பெரிதான கிருபையே. நான் முழுக்க ஞானஸ்நானம் கொடுப்பதுண்டு. நீல்புரத்தில் ஒரு பெரியகுளம் இருந்தது. ஒரே நாளில் 250பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். துன்பத்தின் மத்தியிலும் குடும்பம் குடும்பமாக ஞானஸ்நானம் பெற்ற இச்சம்பவத்தை என்னால் மறக்கமுடியவில்லை.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**செய்திகள்:** **செய்திகள்:**

# காட்டுமிராண்டிகள்:

இஸ்லாமியர்களின் மத நூலான புனித குரானை எரிப்பது பாகிஸ்தானில் மரண தண்டனைக்குரிய குற்றம். அந்நாட்டின் மக்கள் தொகையில் மூன்று சதவீதம் பேர் கிறிஸ்துவர்கள். இவர்களில் கணிசமானவர்களை இஸ்லாமிய இயக்கத்துக்கு மாற்றும் முயற்சிகளில் அங்கிருக்கும் மதவெறியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். மறுப்பவர்களை குரானை எரித்ததாக கூறி வன்முறைக்கு இலக்காக்குகிறார்கள்.

பஞ்சாப் மாகாணத்தில் சமீபத்தில் அவ்வாறு இளம் தம்பதிகளை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கூடி உயிரோடு எரித்தது. அந்நாட்டை சர்வதேச அரங்கில் தலைக்குனிய வைத்திருக்கிறது.

ஷாபாஸ் என்றழைக்கப்படும் **சஜ்ஜத்மஸீயையும்**,அவரது மனைவி **ஷாமா பீபியையும்** இஸ்லாமிய மதத்துக்கு மாறும்படி சமீபமாக சிலர் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். இவர்கள் மறுக்கவே,குரானை எரித்த குற்றத்தை செய்துவிட்டார்கள் என்று இவர்கள்மீது குற்றம் சாட்டப்பட்டது.

இவர்களுக்கு மரண தண்டனை விதித்து உள்ளூர் மசூதியில் ஒலிப்பெருக்கியில் உத்தரவு இடப்பட்டதை தொடர்ந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர்கூடி, இவர்களக்கு தண்டனை வழங்க கிளம்பினார்கள். ஊருக்கே அழைப்பு விடுவிக்கப்பட்டபோது சட்டத்தை காக்கவேண்டிய காவல்துறை என்ன செய்துகொண்டிருந்தது என்றுதான் தெரியவில்லை.

தப்பிக்க முயன்ற தம்பதியினரை அவர்களது முதலாளியே ஓர் அறைக்குள் அடைத்து வைத்து வன்முறை கும்பலின் வசம் ஒப்படைத்ததாக தகவல்கள்.

அவர்களைபிடித்து உடையில் தீ வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே நான்கு குழந்தைகளுக்கு தாய். இப்போது ஐந்தாவதாக கர்ப்பம் தரித்திருக்கும் கர்ப்பிணியான பீபி, தாங்கள் எந்த குற்றத்தையும் செய்யவில்லை என்று கதறியும்கூட மதவெறியர்கள் விடவில்லை. அவர்கள் முழுக்க தீப்பிடித்து மரணிக்கும்வரை வேடிக்கை பார்த்திருக்கிறார்கள்.

உலகமெங்கும் இருந்து பாகிஸ்தானை நோக்கி இச்சம்பவத்துக்காக கண்டனக் கணைகள் தொடுக்கப்பட்ட,அவசர அவசரமாக ஐம்பதுபேர் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு ஐம்பது லட்சம் பணமும்,பத்து ஏக்கர் நிலமும் வழங்கப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது.

# மரணத்தின் மறுபக்கம்:

**மரணத்தின் மறுபக்கம்** என்ற புத்தகத்தை **Dr.Rev.வசந்த குமார்** அவர்கள் சத்தியவசனம் சார்பில் வெளியிட்டார். நானும் அதை நல்ல புத்தகம் என்று வாசிக்காமலே கூட்டங்களில் விளம்பரப்படுத்தினேன். ஆனால் அதை வாங்கி வாசித்தவர்கள் ஏராளமானவர்கள் அதில் உள்ள முரண்பாடுகளை எனக்கு எழுதி தெரிவித்தனர்.

அதைன Dr.வசந்தகுமார் அவர்களுக்கு பத்திரிக்கை வாயிலாக எழுதி அறிவித்தேன். அதற்கு தன் விளக்கத்தை எழுதி அனுப்பியுள்ளார்.அவைகள் முழுவதையும் எழுத நேரம் இல்லை. அதன் முக்கிய பிர்சசனை என்னவென்றால் Dr.வசந்தகுமார் கூறுகிறார். ஒருவன் மரித்தால் பரலோகம் சென்றுவிடுகிறான் என்று பல குறிப்புகளை சுட்டிக்காட்டி விளக்கியுள்ளார்.

எல்லாவற்றுக்கும் விளக்கம் கொடுக்க எனக்கு நேரம் இல்லை. ஒரே ஒரு பதில் மட்டும் எழுதுகிறேன். **மரித்தவன் பரலோகம் சென்றுவிட்டால் நியாய தீர்ப்பு எதற்கு?** தேவையில்லையே. பரலோகம் உறுதியான உடன் அவனை ஏன் நியாயம் விசாரிக்கவேண்டும்.

இப்படி பல விஷயங்களை என் கருத்துக்கு அவர் கருத்து இந்த குறிப்பிட்ட விஷயத்தில் முரண்படுகிறது. வாசகர்கள் வாசித்து நிதானித்து வசன ஆதாரத்தின் அடிப்படையில் தீர்மானித்துகொள்ளுங்கள்.

**ஜாமக்காரன்: மரித்த எவனும் அவன் மனந்திரும்பிவனாக இருந்தாலும் நியாய தீர்ப்புக்கு முன் பரலோகத்துக்கு தேவன் அனுப்புவதில்லை. ஜெபியுங்கள்..வசனத்தை தியானியுங்கள். வெளி 12:7.**

## உள்ளத்தில் நல்ல உள்ளம்:
## மனிதாபிமானம் அழிந்துவிடவில்லை:

கடந்த வாரம் காலை 6.30 மணியளவில்,திருச்சி மாவட்டம் முசிறி அருகேயுள்ள ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த இளம்பெண்ணும், அவரது தாயாரும் சென்னை அண்ணா பல்கலைக் கழகத்திற்கு வந்துள்ளனர். அதிகாலை நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த சிலரிடம் அவர்கள் வழி கேட்டபோதுதான், அங்கிருந்தவர்களுக்கு **ஸ்வாதி** என்ற அந்த இளம்பெண் 12ம் வகுப்பில் 1017 மதிப்பெண் பெற்ற மாணவி என்பதும், அவர் தனது அம்மாவுடன் வேளான் படிப்புக்கான கௌன்ஸிலுக்கு வந்திருப்பதும் தெரியவந்தது. அண்ணா அரங்கு, வேளாண் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்குபோகாமல், தவறுதலாக அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வந்துவிட்டது தெரிந்ததும், அம்மாவும்,பெண்ணும் மனமுடைந்து போயுள்ளனர்.

இதையடுத்து நடைபயிற்சி குழுவினரில் ஒருவர், அவர்களுக்கு காலை உணவு வாங்கிக் கொடுத்துள்ளார். மற்றொருவர் உடனடியாக கோவைக்கான அடுத்த விமானத்தில் டிக்கெட்டுகளை புக் செய்துள்ளார். இன்னோருவர் விமான நிலையத்திற்கு தனது காரை அனுப்பியுள்ளார். கோவையில் அவர்களை ரிஸீவ் செய்து, வேளாண் பல்கழைக்கழத்திற்கு கூட்டி செல்வதற்கும் ஒருவர் கார் ஏற்பாடு செய்துள்ளார். அண்ணா பல்கலைக்கழகத்திலேயே வேலை செய்யும் சிலர் கோவை வேளாண் பல்கலைக்கழத்திற்குப்பேசி, அந்த பெண்ணுக்கு கௌன்ஸிலுக்கான கால நீட்டிப்பு பெற்று தந்துள்ளனர். கொஞ்சம் தாமதமாகக் கௌன்ஸிலுக்கு போய் சேர்ந்தாலும், வேளாண் பல்கலைகழகத்தில் பி.டெக் படிப்பில் சேர்ந்துவிட்டார் ஸ்வாதி. நல்ல உள்ளங்கள் முற்றிலுமாக தொலைந்துவிடவில்லை என்று நிரூபித்துவிட்டது இந்த சம்பவம்.

# CSI SOUTH KERALA DIOCESE
# CHANI CONVENTION






South Kerala CSI Dioceseல் உள்ள **சாணி** என்ற இடத்தில் நடந்த இந்த கூட்டங்கள் மிகவும் சிறப்பாக நடந்தது. சபையின் ஆயர். Rev.K.JOSEPH, (Dist Chairman) அவர்கள் ஜெபத்தோடு கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். கூட்டங்கள் மிகவும் சிறப்பாக நடந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# MADURAI-RAMNAD CSI DIOCESE
## CSI GOOD SAMARITAL CHURCH CONVENTION






மதுரையில் நடந்த இந்த சபையின் 19வது ஆண்டுவிழா மிக சிறப்பாக நடந்தேறியது. தூத்துக்குடி டையோசிஸ் மாடரேட்டர் சம்மிசனரியும் இந்த சபையின் தலைமை போதகருமான Rev.D.Jesusagam, BD,MTh.,MPhil.,அவர்களும், உதவி குருவானவரான Rev.J.Joe Daniel அவர்களும் ஜெபத்தோடு கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். கூட்டத்தில் ஏராளமான ஆயர்களும் கலந்துக்கொண்டு ஆண்டு விழாவை சிறப்பித்தினர். Rev.Banningawashburn ,Rev.T.samuel, R.v.Singh ஆகியவர்கள் கலந்துகொண்டனர். செய்திகள் மூலமாக இதுவரை 17 மிஷனரிகளை தாங்கிக்கொண்டிருந்த சபையினர் கூட 3 மிஷனரிக்ளை தாங்கபோவதாக பொருத்தனை செய்து அறிவித்தின்மூலம் ஆண்டவர் நாமமம் மகிமைப்பட்டது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# நீங்கள் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்

‘ அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

‘ சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது.

‘ **ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். எபே 4: 30-32**

‘ ஆகவே நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். தேவன் உங்கள் பாவங்களை மன்னித்தது உண்மையானால், நீங்கள் மற்றவர்களை மன்னிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

**OCTOBER 2015**

Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.